# தினபூமி

thinaboomi.com


பூமி: 30 சுற்று: 219 வைகாசி 04

TN-TVL/25/2012-2014

நெல்லை, ஞாயிறு, மே 18, 2025

சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**மிகவும் சங்கடம் தந்த தருணம்: இந்திய தாக்குதலை முதன்முறையாக ஒப்புக்கொண்ட பாகிஸ்தான் பிரதமர்**

...2-ம் பக்கம்

**21 நாட்களும் தூங்க விடாமல் தொடர்ந்து விசாரணை: பி.எஸ்.எப்.வீரர் மனைவி உருக்கம்**

...3-ம் பக்கம்

**சூப்பர்பெட் கிளாசிக் செஸ்: இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு பட்டம்**

...6-ம் பக்கம்





சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய தேசிய கல்விக்கொள்கை-2020 எனும் மதயானை நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி, திக்விஜய சிங், நீதிபதி கோபால கவுடா, மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டனர்.

### இது காவி நாடல்ல; திராவிட நாடு: இடஒதுக்கீடு, பன்முகத்தன்மையை சீர்கெடுக்கும்

# தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் திட்டவட்டம்

சென்னை, மே 18-

**இது காவி நாடல்ல; திராவிட நாடு என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், இடஒதுக்கீடு, பன்முகத்தன்மையை சீர்கெடுக்கும் தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது என்று மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

**மாநில பட்டியலுக்கு...**

சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மத யானை நூலை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். பின்பு பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்,

இது காவி நாடல்ல; திராவிட நாடு, இடஒதுக்கீடு, பன்முகத்தன்மையை சீர்கெடுக்கும் தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது. மாநிலப்பட்டியலுக்கு கல்வியை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

**வீழ்த்த வேண்டும்...**

பின்னர் நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

எல்லாவற்றிலும் சாதக பாதகம் இருக்கும். ஆனால், புதிய கல்விக் கொள்கையில் பாதகம் மட்டுமே உள்ளது. கல்விக் கொள்கைக்கு மதம் பிடித்தால் நாடு, மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கும். புதிய கல்விக் கொள்கை எனும் மதயானையை வீழ்த்த வேண்டும். கல்வியை மீண்டும் மாநில பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும்.

**சீரழிக்கும் திட்டம்....**

மத்திய அரசின் குலக் கல்வி திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. யாரெல்லாம் படிக்கக்கூடாது என்று கூறுவதே புதிய கல்விக் கொள்கையின் நோக்கம். தேசிய கல்விக்கொள்கை நமது மாணவர்களின் படிப்பை சீரழிக்கும் திட்டம். எத்தனையோ சூழ்ச்சிகளை எதிர்த்துப் போராடி தமிழ்நாடு வென்றுள்ளது. அந்த வரிசையில் புதிய கல்விக் கொள்கையையும் எதிர்த்து தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### மறுதேர்வு நடத்தக்கோரி மாணவர்கள் வழக்கு:

# நீட் தேர்வு முடிவுகளை வெளியிட ஐகோர்ட் தடை

சென்னை, மே 18-

**மின் தடையால் தேர்வை சரியாக எழுதாததால் மறு தேர்வு தேவை என மாணவர்கள் தொடர்ந்த வழக்கில் சென்னை ஐகோர்ட் நீட் தேர்வு முடிவுகளை வெளியிட தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது.**

மருத்துவப் படிப்பிற்காக நீட் நுழைவுத் தேர்வு (இளநிலை) 2025 இந்தியா முழுவதும் பல்வேறு மையங்களில் கடந்த 4-ம் தேதி நடத்தப்பட்டது. சென்னையை அடுத்த ஆவடியில் மையத்தில் 464 மாணவர்களுக்கு தேர்வு எழுத நுழைவுச்சீட்டு வழங்கப்பட்டது. பிற்பகல் 2 மணிக்கு தேர்வு தொடங்கிய நிலையில், கனமழை காரணமாக 3 மணியில் இருந்து 4.15 மணி வரை மின் தடை ஏற்பட்டது. இதன் காரணமாக அந்த மையத்தில் தேர்வெழுதிய மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டனர்.

இதனால், தங்களுக்கு மறு தேர்வு தேவை என, ஆவடி தேர்வு மையத்தில் தேர்வெழுதிய 13 மாணவர்கள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். மின் தடையால் குறைந்த வெளிச்சத்தில் தேர்வு எழுதியதாகவும், கவனச்சிதறலால் முழு திறமையுடன் தேர்வு எழுதவில்லை என்றும், தங்களுக்கு மறு தேர்வு தேவை எனவும் மாணவர்கள் தங்களது மனுவில் தெரிவித்து இருந்தனர்.

இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஏ.ஆர்.எல் சுந்தரேசன், மின் தடை ஏற்பட்டதா? என்பது குறித்தும், அவ்வாறு மின்தடை ஏற்பட்டிருந்தால் மாணவர்களின் கோரிக்கை பரிசீலிப்பது குறித்து பதிலளிக்க அவகாசம் அளிக்க வேண்டும் என தெரிவித்தார். இதையடுத்து, இது குறித்து மத்திய அரசு, தேசிய மருத்துவ ஆணையம், தேசிய தேர்வு முகமை பதிலளிக்க உத்தரவிட்ட சென்னை ஐகோர்ட்டு, அதுவரை நீட் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்கால தடை விதித்தது. அத்துடன், விசாரணையை வரும் 2-ம் தேதி ஒத்திவைத்தது.

இதற்கிடையே சென்னையில் நடந்த சம்பவம் போன்று மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் அமைக்கப்பட்டிருந்த நீட் தேர்வு மையத்தில் மின் தடை ஏற்பட்டதாகக் கூறி மாணவி ஒருவர் தொடர்ந்த வழக்கில், இளநிலை நீட் தேர்வு முடிவுகளை வெளியிட தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### பாக்., மோதல் குறித்து உலக நாடுகளுக்கு விளக்கமளிக்க

# அனைத்துக்கட்சி பிரதிநிதிகளின் குழுவை அமைத்தது மத்திய அரசு

## தி.மு.க. எம்.பி. கனிமொழி உள்ளிட்ட 7 பேருக்கு இடம்

புதுடெல்லி, மே 18-

**இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் குறித்து முக்கிய வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு விளக்கமளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் குழுவிற்கு தலைமை தாங்கும் ஏழு எம்.பிக்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குழுவுக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி, காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் உட்பட 7 பேர் இடம்பெற்றுள்ளனர்.**

சமீபத்திய இந்தியா-பாகிஸ்தான் மோதல் மற்றும் அது குறித்த இந்தியாவின் நிலைப்பாடு குறித்து முக்கிய வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு விளக்கமளிக்கும் பணியில் ஈடுபடவுள்ள அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் குழுவிற்கு தலைமை தாங்கும் ஏழு எம்.பி.க்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் காங்கிரஸ் எம்.பி சசி தரூர், தி.மு.க. எம்.பி கனிமொழி, என்.சி.பி. எம்.பி சுப்ரியா சுலே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஏப்ரல் 22 பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் இந்தியாவின் பதிலடி தாக்குதலான ஆபரேஷன் சிந்தூர் ஆகியவற்றைத் தொடர்ந்து, இந்தியாவின் ராஜதந்திர நடவடிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களின் பெயர்களை பாராளுமன்ற விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பை பகிர்ந்து கொண்ட பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, மிக முக்கியமான தருணங்களில், பாரதம் ஒற்றுமையாக உள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை என்ற எங்கள் பகிரப்பட்ட செய்தியை எடுத்துச் செல்லும் ஏழு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் விரைவில் முக்கிய கூட்டாளி நாடுகளுக்குச் செல்வார்கள். வேறுபாடுகளுக்கு அப்பால், இது அரசியலுக்கு அப்பாற்பட்ட தேசிய ஒற்றுமையின் சக்திவாய்ந்த பிரதிபலிப்பு என்று அவர் தெரிவித்துள்ளார்.

**எம்.பி.க்கள் குழு விவரம் (தலைமை)**

1) ரவி சங்கர் பிரசாத் (பா.ஜ.க.).
2) சஞ்சய் குமார் ஜா (ஜே.டி.யு.).
3) பைஜயந்த் பாண்டா (பா.ஜ.க.).
4) கனிமொழி கருணாநிதி (தி.மு.க.).
5) சுப்ரியா சுலே (என்.சி.பி.).
6) ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே (சிவசேனா).
7) சசி தரூர் (காங்கிரஸ் எம்.பி.)

கனிமொழி எம்.பி. உள்ளிட்ட 7 பேர் தலைமையிலான ஒவ்வொரு குழுவிலும் 5 முதல் 6 எம்.பி.க்கள் இருப்பார்கள் என்றும், அமெரிக்கா, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளுக்கு இவர்கள் பயணம் செய்வார்கள் என்றும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வெளிநாட்டு சுற்றுப்பயணம் மே 22 க்குப் பிறகு தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் பாகிஸ்தானின் பங்கை வெளிச்சம் போட்டு காட்டவும், தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு சர்வதேச ஆதரவை ஒருங்கிணைக்கவும் மத்திய அரசு இந்த ராஜதந்திர தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

### திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில்

# சனிக்கிழமைகளில் நாள் முழுதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

## துணை முதல்வர் உதயநிதி துவக்கி வைத்தார்

## ஆண்டொன்றுக்கு 82,000 பக்தர்கள் பயன்பெறுவர்

சென்னை, மே 18-

**சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோவிலில் சனிக்கிழமைகளில் அன்னதானம் வழங்கும் திட்டத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (சனிக்கிழமை) தொடக்கி வைத்தார். இந்த திட்டம் மூலம் ஆண்டொன்றுக்கு திருக்கோவிலுக்கு வருகை தரும் 82,000 பக்தர்கள் பயன்பெறுவார்கள்.**

தமிழ்நாட்டில் பல்வேறு கோவில்களில் பக்தர்களின் வசதிக்கேற்ப நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, கோவில்களில் ஒருவேளை அன்னதானம், நாள் முழுவதும் அன்னதானம், திருவிழா மற்றும் சிறப்பு நாள்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோவிலில் சனிக்கிழமைகளில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் நேற்று தொடங்கப்பட்டது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், '2021-ம் ஆண்டிற்கு முன் ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோவில் மற்றும் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ஆகிய 2 திருக்கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 754 திருக்கோவில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வந்தது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், கடந்த நான்காண்டுகளில் கூடுதலாக 11 திருக்கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு தற்போது 13 திருக்கோவில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது 764 திருக்கோவில்களில் ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 3.5 கோடி பக்தர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

2025-2026 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலில் சனிக்கிழமைகள் மற்றும் விழா நாள்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலில் நேற்று (17.05.2025) சனிக்கிழமை நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதனடிப்படையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலில் வாரந்தோறும் சனிக்கிழமைகள், புரட்டாசி மாதம் முழுவதும் அனைத்து நாள்களிலும், பார்த்தசாரதி சுவாமி திருத்தேரோட்டம், நரசிம்மர் சுவாமி திருத்தேரோட்டம், மாசிமகம், வைகுண்ட ஏகாதசி ஆகிய 82 நாள்களில் வடை, பாயசத்துடன் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட உள்ளது.

இதன்மூலம் மேற்குறிப்பிட்ட நாட்களில் ஆண்டொன்றுக்கு திருக்கோவிலுக்கு வருகை தரும் 82,000 பக்தர்கள் பயன்பெறுவார்கள். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, அரசு அலுவலர்கள், மக்கள் கலந்து கொண்டனர்.

# 4 மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல்

சென்னை, மே 18-

**18 மசோதாக்கள் அனுப்பப்பட்டதில் நிதிநிலை அறிக்கை தொடர்பான 4 மசோதாக்களுக்கு தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்கி உள்ளார்.**

கடந்த மார்ச் 14 முதல் ஏப். 29 வரை நடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் 18 மசோதாக்கள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டு கவர்னர் ஆர் என் ரவிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நீண்ட நாட்களாக கவர்னரின் ஒப்புதலுக்காக காத்திருந்த நிலையில் இன்று 4 சட்ட திருத்த மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்கி உள்ளார். 4 மசோதாக்களையும் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேரவையில் தாக்கல் செய்திருந்தார்.

### அரபிக்கடல் பகுதியில்

# மே 22-ல் உருவாகிறது புதிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி

சென்னை, மே 18-

**அரபிக்கடல் பகுதியில் வரும் 22 ம் தேதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. மேலும், தமிழகத்தில் வரும் 20 வரை பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியானது (புயல் சின்னம்) மத்திய கிழக்கு கர்நாடகத்தை ஒட்டிய அரபிக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி (புயல் சின்னம்) உருவாகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் பரவலாக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியானது மேலும் தீவிரமடைய வாய்ப்புள்ளது கணிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொடர்ந்து மே 20 வரை பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே வடமாநிலங்களில் சில நாட்களுக்கு வெப்ப அலை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. டெல்லியில் 21 அல்லது 22 ஆகிய தேதிகளில் லேசான மழைப்பொழிவு இருக்க கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மைய விஞ்ஞானி கூறியுள்ளார்.

வடமேற்கு இந்தியாவில் வடக்கு-தெற்கு உயர் அழுத்தம் விளைவாக பஞ்சாப், அரியானா, டெல்லி மற்றும் வடக்கு ராஜஸ்தானில் கடந்த சில நாட்களாக 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வலிமையான மேற்பரப்பு காற்று வீசியது. இதன் விளைவாக, மேற்குறிப்பிட்ட மாநிலங்களில் சில பகுதிகளில் புழுதி பரவியது.

இதனால், டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலும் தெளிவற்ற வானிலை காணப்பட்டது. டெல்லியில் மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

எனினும், 20-ந்தேதிக்கு பின்னர், 21 அல்லது 22 ஆகிய தேதிகளில் டெல்லியில் லேசான மழைப்பொழிவு இருக்க கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↓ - 200.15 | ↑ - 42.30 |
| பாயின்ட் 82,330.59 | பாயின்ட் 25,019.80 |


**தங்கம்** 1 சவரன் ₹44,440 · 1 கிராம் ₹5,555

**வெள்ளி** 1 கிலோ ₹108,000 · 1 கிராம் ₹108.00

**டாலர்** ₹81.99

**பெட்ரோல்** ₹102.63 · **டீசல்** ₹94.24

### மிகவும் சங்கடம் தந்த தருணம்:
# இந்திய தாக்குதலை முதன்முறையாக ஒப்புக்கொண்ட பாகிஸ்தான் பிரதமர்



**இஸ்லாமாபாத், மே 18-**

ஆபரேஷன் சிந்தூரின் போது தங்கள் நாட்டின் முக்கிய விமான தளங்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது பற்றி பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் முதன்முறையாக வெளிப்படையாகப் பேசியுள்ளார்.

முன்னதாக, வெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நிகழ்வில் இதனை அவர் தெரிவித்துள்ளார். "மே.10 அதிகாலை 2.30 மணி அளவில் எனக்கு ஜெனரல் முனீர் போன் செய்தார். அப்போது நமது நாட்டின் முக்கிய விமான தளங்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் கூறினார். அது மிகவும் சங்கடம் தந்த தருணம்" என பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார். இந்தியாவின் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த தாக்குதல் நடந்துள்ளதாக தெரிகிறது.

"பாகிஸ்தானும் இந்தியாவும் அமைதியான அண்டை நாடுகளைப் போல காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைத் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். அமைதி நிலவினால் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் நம்மால் ஒத்துழைக்க முடியும்" என ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தானுடனான எந்தவொரு பேச்சுவார்த்தையும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்ததாக மட்டுமே இருக்கும். ஒப்படைக்க வேண்டிய பயங்கரவாதிகளின் பட்டியல் பாகிஸ்தானிடம் உள்ளது. அவர்கள் பயங்கரவாதிகளின் கட்டமைப்பை மூட வேண்டும். இந்தியா பாகிஸ்தான் பிரச்சினையில் மூன்றம் தரப்பு மத்தியஸ்தம் செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஏற்கெனவே திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒடிசாவில் மின்னல் தாக்கி 9 பேர் பலி

**புவனேஸ்வர், மே 18-**

ஒடிசாவில் மின்னல் தாக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒடிசா முழுவதும் நேற்று முன்தினம் ஏற்பட்ட மின்னல் தாக்குதல் சம்பவங்களில் ஆறு பெண்கள் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்த மின்னல் தாக்குதல் சம்பவங்களில் கோராபுட் மாவட்டத்தில் மூன்று பேர், ஜாஜ்பூர் மற்றும் கஞ்சம் மாவட்டங்களில் தலா இரண்டு பேர், தேன்கனல் மற்றும் கஜபதி மாவட்டங்களில் தலா ஒருவர் உயிரிழந்ததாக மாநில அரசின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோராபுட் மாவட்டத்தில் உள்ள பரிதிகுடா கிராமத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது கன மழை மற்றும் பலத்த காற்று காரணமாக ஒரு தற்காலிக குடிசையில் தஞ்சம் புகுந்தனர். அப்போது குடிசையில் மின்னல் தாக்கியதில் மூன்று பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஜாஜ்பூர் மாவட்டத்தில், தர்மசாலா பகுதியில் தாரே ஹெம்ப்ரம் (15) மற்றும் துக்குலு சத்தார் (12) ஆகிய இரு சிறுவர்கள் வீட்டின் வராண்டாவில் நின்று கொண்டிருந்த போது மின்னல் தாக்கியதில் அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கஞ்சம் மாவட்டத்தில் உள்ள பரிதா கிராமத்தில் ஓம் பிரகாஷ் பிரதான் என்ற 7-ம் வகுப்பு மாணவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார். பெலகுந்தா பகுதியில் உள்ள ஒரு பழத்தோட்டத்தில் மாம்பழங்களை சேகரிக்கும் போது 23 வயது பெண் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

### பாக்.கிற்கு உளவு பார்த்ததாக புகார்:
# அரியானாவில் மாணவர் கைது

**சண்டிகர், மே 18-**

பாகிஸ்தானில் உளவு பார்த்ததாக அரியானாவை சேர்ந்த மாணவனை கைது செய்தனர்.

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாகவும், முக்கியமான தகவல்களை அனுப்பியதாகவும் சந்தேகத்தின் பேரில் அரியானாவைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் ஓரளவு அமைதி திரும்பியுள்ள நேரத்தில் அரியானாவில் நடந்த இரண்டாவது கைது இதுவாகும்.

பாட்டியாலாவின் கல்சா கல்லூரியில் அரசியல் அறிவியல் படிக்கும் 25 வயது மாணவரான தேவேந்திர சிங் தில்லான், மே 12 அன்று கைதாலில் இருந்து கைத்துப்பாக்கிகளின் புகைப்படங்களை தனது பேஸ்புக் கணக்கில் பதிவேற்றியதற்காக கைது செய்யப்பட்டார். விசாரணையின் போது, அவர் கடந்த ஆண்டு நவம்பரில் கர்தார்பூர் வழித்தடம் வழியாக பாகிஸ்தானுக்குச் சென்று பாகிஸ்தானின் இன்டர் சர்வீசஸ் புலனாய்வு அமைப்பின் அதிகாரிகளிடம் முக்கியமான தகவல்களைப் பகிர்ந்து கொண்டதாகத் தெரியவந்தது.

அண்டை நாட்டின் உளவுத்துறை அதிகாரிகள் தில்லானுக்கு நிறைய பணம் செலவழித்ததாகக் கூறப்படுகிறது. முதலாமாண்டு முதுகலை மாணவரான இவர், பாட்டியாலா ராணுவ கன்டோன்மென்ட்டின் படங்களையும் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பகிர்ந்து கொண்டதாக கைதல் காவல் கண்காணிப்பாளர் ஆஸ்தா மோடி தெரிவித்தார். அவரது கைப்பேசி பறிமுதல் செய்யப்பட்டு தடயவியல் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தில்லானுக்கும் பாகிஸ்தான் அதிகாரிகளுக்கும் இடையிலான பணப் பரிமாற்றம் குறித்து அறிய அவரது வங்கிக் கணக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

# அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 17-வது முறை வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, மே 18-**

அண்ணா பல்கலைக்கழகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழக பதிவாளர் மின்னஞ்சல் முகவரிக்கு கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில், அண்ணா பல்கலைக் கழக வளாகத்திலும், அந்த வளாகத்தில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியிலும் அதிக திறன் கொண்ட வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. அது வெள்ளிக்கிழமை வெடிக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பதிவாளர் அலுவலக ஊழியர்கள், இது தொடர்பாக கோட்டூர்புரம் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து போலீஸார் வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் உடன் விரைந்து வந்து சோதனை நடத்தினர். அப்போது எந்த வெடிப் பொருளும் கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து, வதந்தியை பரப்பும் நோக்கத்துடன் மிரட்டல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது தெரியவந்தது. அண்ணா பல்கலைக்கழகத்துக்கு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 17 முறை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏமன் துறைமுகங்கள் மீது இஸ்ரேல் திடீர் தாக்குதல்


**சனா, மே 18-**

ஏமன் துறைமுகங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் , ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்குமேல் நடைபெற்று வருகிறது. இந்த போரில் 53 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு அளித்து வருகின்றனர். ஹமாசுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில், கடந்த வாரம் இஸ்ரேலை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். அந்த தாக்குதலுக்கு பதிலடியாக நேற்று ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள 2 துறைமுகங்கள் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. ஏமனின் ஹுடைடா மற்றும் அஸ்சலிப் நகரங்களில் உள்ள துறைமுகங்கள் மீது இஸ்ரேல் விமானப்படை குண்டு மழை பொழிந்துள்ளது. இந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்பு, பாதிப்பு தொடர்பான விவரம் இதுவரை வெளியாகவில்லை.

# இமயமலை ஏறும் போது இந்தியர் மயங்கி விழுந்து பலி



**காத்மண்டு, மே 18-**

இமயமலை ஏறும் போது இந்தியர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

இந்தியா, நேபாளம் இடையே இமயமலை உள்ளது. இந்த மலையில் உள்ள எவரஸ் உள்ளிட்ட சிகரங்களில் ஏற உலகம் முழுவதும் இருந்து மலையேற்ற வீரர், வீராங்கனைகள், சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில் இந்தியாவின் மேற்குவங்காளத்தை சேர்ந்த சபரதா கோஷ் (வயது 45) நேபாளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இமயமலையின் எவரஸ் சிகரம் நோக்கி மலையேற தொடங்கியுள்ளார். அவருக்கு வழிகாட்டியாக சம்பல் தமுக் என்பவர் சென்றுள்ளார். சபரதா கோஷுடன் மேலும் சில மலையேற்ற வீரர்கள் சென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மதியம் 2 மணியளவில் சிகரத்தை அடைந்தபின் அங்கிருந்து அனைவரும் முகாம் திரும்பியுள்ளனர். வரும் வழியில் சபரதா கோஷுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த அவரது வழிகாட்டி இரவு முகாமிற்கு வந்து தகவல் கொடுத்துள்ளார். இதையடுத்து, உயிரிழந்த சபரதா கோஷ் உடலை தேடும் பணியில் மலையேற்ற வீரர்கள் நேற்று ஈடுபட்டு வருகின்றனர். அவரது உடல் மீட்கப்பட்டு இந்தியாவில் உள்ள உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

# திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க ஆகஸ்ட் மாத டிக்கெட் வெளியீடு


**திருமலை, மே 18-**

திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க ஆகஸ்ட் மாதம் டிக்கெட் வெளியீடு செய்யப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க, வரும் 19-ம் தேதி முதல் ஆன்லைன் டிக்கெட்டுகள் மற்றும் இலவச டோக்கன்களை திருப்பதி தேவஸ்தானம் தனது இணையதளத்தில் வெளியிட உள்ளது.

அதன்படி 19-ம் தேதி காலை 10 மணி முதல் 21-ம் தேதி காலை 10 மணி வரை குலுக்கல் முறை ஆர்ஜித சேவைகளுக்கு பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம். 22-ம் தேதி காலை 10 மணிக்கு கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவை மற்றும் வருடாந்திர பவித்ரோற்சவத்திற்கு முன்பதிவு செய்யலாம். 23-ம் தேதி காலை 10 மணிக்கு அங்கப்பிரதட்சண டோக்கன் வெளியாக உள்ளது. 24-ம் தேதி காலை 10 மணிக்கு ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட் தொடங்குகிறது.

**18-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** புதிய கலைப் பயிற்சிகள் மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். சாதுர்யமான வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான பண வரவால் சந்தோஷம் நிலவும்.

**ரிஷபம்:-** இன்று சுமாரான நாள். சிலருக்கு மனைவியால் மன நிம்மதி குறையும். எடுத்த காரியங்கள் ஏற்றம் தராது என்பதால், ஒத்திப் போடுவது நல்லது. கடின உழைப்பே கல்வியில் தேர்ச்சி அளிக்கும்.

**மிதுனம்:-** இன்று உயர் போகம், நல் ஆரோக்கியம், சந்ததி விருத்தி, மந்திர சித்தி, பதவி உயர்வு என இராஜயோகம் தரும் நாள். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்:-** இன்று, சோகமான நாளாக இல்லையெனினும், சுகமான நாளாக இருக்காது. பெண்களின் பிடிவாதத்தால் வீண் விரயங்கள் ஏற்படும். குடும்பத்துடன் அனுசரித்துச் செல்வது குழப்பங்களைத் தவிர்க்கும்.

**சிம்மம்:-** இன்று, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும். காரிய வெற்றி களிப்பு உண்டாகும்.. அரசு ஆதரவும், கல்வியில் தேர்ச்சியும் ஏற்படும். தன்னம்பிக்கை, மற்றும் தைரியம் அதிகரிக்கும்.

**கன்னி:-** இன்று காரிய வெற்றி தரும் களிப்பான நாள். அரசு ஆதரவு இருக்கும் அனுகூலமான நாள். கல்வி, தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் தேகதிடம் அதிகரிக்கும். அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படும்.

**துலாம்:-** இன்று, தெய்வ சிந்தனை அதிகரிக்கும் நாள். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், குளம் போன்ற திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும். உல்லாச பயணங்களால் சந்தோஷம் நிலவும்.

**விருச்சிகம்:-** மாற்றம் ஒன்றே மாறாதது. எனவே, இன்று மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**தனுசு:-** இன்று, புதிய கலைப் பயிற்சிகள் மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். சாதுர்யமான வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான பணவரவால் சந்தோஷம் நிலவும்.

**மகரம்:-** இன்று, பல வழிகளிலும் பணவரவு ஏற்பட போகும் இனிய நாள். எல்லா வகையிலும் ஏற்றந்தரும் நாள். நல் ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல்முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**கும்பம்:-** இன்று, சுமாரான நாள். மனைவி, மக்களின் உடல் நிலையைப் பொறுத்தவரை அக்கறை படவேண்டிய நாள். மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

**மீனம்:-** இன்று ஓஹோ என இருக்காது. இன்றைய நாள் கழிவது யுகங்கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அக்கறை கொள்ளுங்கள். நிம்மதியான தூக்கம் வராது. நீர்நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

# பாலஸ்தீனியர்களை நிரந்தரமாக லிபியாவில் குடியமர்த்த திட்டம்
### சொல்கிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்

**வாஷிங்டன், மே 18-**

பாலஸ்தீனியர்களை நிரந்தரமாக லிபியாவில் குடியமர்த்த டிரம்ப் திட்டமிட்டுள்ளார்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 59 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளை, பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காசா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது. காசா முனையில் இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனிடையே, காசா முனையில் இருந்து பாலஸ்தீனியர்களை வெளியேற்றிவிட்டு அதை அமெரிக்க கட்டுப்பாட்டில் கொண்டுவர அதிபர் டிரம்ப் முன்மொழிந்தார். அவரது அறிவிப்பிற்கு பல்வேறு தரப்பும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. அதேவேளை, டிரம்பின் முடிவுக்கு இஸ்ரேல் ஆதரவு தெரிவித்தது. இந்நிலையில், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களில் 10 லட்சம் பேரை லிபியாவில் நிரந்தரமாக குடியமர்த்த டிரம்ப் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக லிபியா அரசுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. பாலஸ்தீனியர்களை லிபியா அரசு ஏற்றுக்கொண்டால் அந்நாட்டின் முடக்கப்பட்ட சொத்துக்களை விடுவிக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுளது.

# 8 மாதங்களில் 42 கி. எடையை குறைத்த நடிகர் அஜித்குமார்



**சென்னை, மே 18-**

நடிகர் அஜித்குமார் 8 மாதங்களில் 42 கிலோ எடையைக் குறைத்துள்ளார்.

நடிகர் அஜித்குமார் 8 மாதங்களில் 42 கிலோ எடையைக் குறைத்தது குறித்து பேசியுள்ளார். நடிகர் அஜித் நடிப்பில் சமீபத்தில் வெளியான குட் பேட் அக்லி திரைப்படம் வசூல் ரீதியாக வெற்றி பெற்றது. தற்போது பைக் ரேஸிங்கில் முழுமையான கவனத்தை செலுத்தி வருகிறார். ரேஸிங்கிற்காக நடிகர் அஜித் உடல் எடையைக் குறைதத்தாகக் கூறியுள்ளது சமூக ஊடகங்களில் வைரலானது. அஜித் பேசியதாவது:-

15 ஆண்டுகளுக்குப் பிறகு கார் ரேஸில் பங்கேற்கிறேன். அதனால் எனக்கு மிகுதியான உடற்தகுதி தேவைப்பட்டது. 8 மாத கால இடைவெளியில் 42 கிலோ எடையைக் குறைத்தேன். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் எனது எடை இழப்புப் பணியைத் தொடங்கினேன். உணவுமுறை, அளவு கட்டுப்பாடு, நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டு இதைக் குறைத்தேன். நான் ஒரு டீடோட்டலராகவும் சைவ உணவை உண்பவராகவும் மாறிவிட்டேன். ரேஸிங்கிற்கு என் இதயத்தையும் ஆன்மாவையும் கொடுக்க வேண்டும். அதை நான் தொடர்ந்து செய்வேன். ரேஸிங்கிற்காக திரைப்பட படப்பிடிப்புகளிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வேன் எனக் கூறினார்.

எனது படங்களில் சண்டையிடுவதும் நான்தான். அதிலும் காயம் ஏற்படுகிறது. அதனால் ஆக்ஷன் படங்களில் நடிக்காமல் இருக்க மாட்டேன். அதேபோலதான் ரேஸிங்கிற்கும் உடலும் உள்ளமும் அதிகமான ஈடுபாடு தேவைப்படுகிறது. அதனால், இதில் காயம் ஏற்படுவதை நான் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை என்றும் கூறினார்.

### பள்ளி புத்தகம் கொண்டு வரவேண்டாம்:
# மாணவர்களுக்கு இன்ப அதிர்ச்சி தந்த கேரள அரசு

**திருவனந்தபுரம், மே 18-**

கேரளாவில் முதல் 2 வாரங்களுக்கு மாணவர்கள் புத்தகங்கள் கொண்டு செல்ல தேவையில்லை என்று அந்த மாநில அரசு அறிவிததுள்ளது.

கேரளாவில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கும்போது, முதல் 2 வாரங்களுக்கு மாணவர்கள் புத்தகங்கள் கொண்டு செல்ல தேவையில்லை என்று கேரள அரசு அறிவித்துள்ளது. பள்ளிகள் திறந்து முதல் 2 வாரங்கள் சமூக பிரச்சனைகள் தொடர்பான விழிப்புணர்வு வகுப்புகள் நடைபெறும் என கேரள அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய கல்வித்துறை அமைச்சர் சிவன்குட்டி, போதைப்பொருள் துஷ்பிரயோகம், பொது சொத்துக்களை அழித்தல் மற்றும் உணர்ச்சி கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல தலைப்புகளில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் பள்ளிகளில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

# காஸாவில் 2 நாட்களில் மட்டும் 300 பேர் பலி

**காஸா, மே 18-**

காஸாவில் ஹமாஸ் படையினரைக் குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தொடர் தாக்குதல்களில் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மத்திய கிழக்கு ஆசிய நாடான இஸ்ரேலுக்குள் கடந்த 2023-ஆம் ஆண்டு அக்டோபரில் ஊடுருவி அங்குள்ள சுமார் 250 மக்களை பிணைக்கைதிகளாக ஹமாஸ் படையினர் காஸாவுக்கு பிடித்துச் சென்றதுடன், அவர்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 1200-க்கும் மேற்பட்டோர் இஸ்ரேலில் கொல்லப்பட்டனர். இதனைத்தொடர்ந்து, இஸ்ரேல் ராணுவம் காஸாவில் பல்வேறு கட்டமாக தாக்குதல்களை தொடர்ந்து வருகிறது.

இதனிடையே, காஸாவில் தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளதன் வெளிப்பாடாய், கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு நாள்களில் காஸாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300-ஐ கடந்து விட்டதாக கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன. மொத்த உயிரிழப்பு 53,000த்தை கடந்துள்ளது என்று காஸா சுகாதாரத் துறை தரப்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஏழுமலையானுக்கு 5 கிலோ தங்க ஹஸ்தங்கள் காணிக்கை

**திருமலை, மே 18-**

திருப்பதி ஏழுமலையானுக்கு 5 கிலோ தங்க ஹஸ்தங்கள் காணிக்கையாக செலுத்தப்பட்டது.

திருப்பதி ஏழுமலையானுக்கு கொல்கத்தாவை சேர்ந்த சஞ்சீவ் கோயங்கா எனும் பக்தர் 5.267 கிலோ எடையில் 2 தங்க ஹஸ்தங்களை (கைகள்) நேற்றுமுன்தினம் காணிக்கையாக வழங்கினார்.

ரூ.3.63 கோடி மதிப்புடைய இந்த தங்க ஹஸ்தங்களை திருமலை திருப்பதி தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி பெற்றுக்கொண்டார்.

முன்னதாக ஏழுமலையானை சஞ்சீவ் கோயங்கா தரிசனம் செய்தார். அவருக்கு ரங்கநாயக மண்டபத்தில் தேவஸ்தான அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தனர்.

# ஜூன் 14-ல் வி.சி.க. பேரணி

**திருச்சி, மே 18-**

திருச்சியில் வருகிற 31-ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த விடுதலை சிறுத்தைகள் பேரணி ஜூன் 14ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக திருமாவளவன் தெரிவித்துள்ளார். மதச்சார்பின்மை காப்போம் என்ற பெயரிலான பேரணி ஜூன் 14ஆம் தேதி நடத்தப்படும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் அறிவித்துள்ளார்.

### வைரமுத்துவின் தாயார் மறைவு:
# முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆறுதல்

சென்னை மே 18-

வைரமுத்துவின் தாயார் மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று கவிஞர் வைரமுத்து மற்றும் அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

கவிஞர் வைரமுத்துவின் தாயார் அங்கம்மாள் வயது மூப்பு காரணமாக கடந்த 10-ம் தேதி காலமானார். அவரது இறுதிச்சடங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேனி மாவட்டத்தில் நடைபெற்றது. அவருடைய இறப்பைத் தொடர்ந்து வைரமுத்து மற்றும் அவரின் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் சென்னை பெசன்ட் நகரில் உள்ள கவிஞர் வைரமுத்து இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார். அவருடன் எம்.பி.க்கள் டி.ஆர் பாலு, ஆ.ராசா, அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் உடன் இருந்தனர். வைரமுத்துவின் மகன்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### வரியற்ற வர்த்தக ஒப்பந்தம்:
# அமெரிக்க அதிபரின் பேச்சுக்கு அமைச்சர் ஜெய்சங்கர் மறுப்பு

நியூயார்க், மே 18-

அமெரிக்கப் பொருட்களுக்கான 100% வரிகளைக் குறைக்க இந்தியா தயாராக உள்ளது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார். இதை அமைச்சர் ஜெய்சங்கர் மறுத்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அளித்த பேட்டியில், "இந்தியா உலகின் மிக உயர்ந்த வரிகளைக் கொண்ட நாடுகளில் ஒன்று. அவர்கள் வணிகம் செய்வதை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்குகிறார்கள். அமெரிக்காவுக்கான தங்கள் வரிகளில் 100 சதவீதத்தைக் குறைக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள்" என ட்ரம்ப் கூறினார்.

இந்தியாவுடனான ஒப்பந்தம் விரைவில் வருமா என்று கேட்டபோது, ட்ரம்ப், எல்லோரும் எங்களுடன் ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார்கள். எங்களுடன் தென் கொரியா ஒரு ஒப்பந்தம் செய்ய விரும்புகிறது. ஆனால் நான் எல்லோருடனும் ஒப்பந்தம் செய்யப் போவதில்லை. நான் வரம்பை நிர்ணயிக்கப் போகிறேன். ஒப்பந்தங்களைச் செய்ய விரும்பும் 150 நாடுகள் என்னிடம் உள்ளன. வர்த்தக ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த இந்தியாவும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன." என்றார்.

இதுகுறித்து விளக்கமளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், "இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இவை சிக்கலான பேச்சுவார்த்தைகள். எல்லாம் முடியும் வரை எதுவும் முடிவு செய்யப்படுவதில்லை. எந்தவொரு வர்த்தக ஒப்பந்தமும் பரஸ்பரம் நன்மை பயக்கும்; அது இரு நாடுகளுக்கும் வேலை செய்ய வேண்டும்" என்று அவர் கூறினார். அதேபோல். காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ், "அமெரிக்க அதிபர் பூஜ்ய வரி விதிப்பை இந்தியா ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கிறார். நமது பிரதமர் மோடி இந்த விவகாரத்தில் மவுனம் காக்கிறார். இதற்கும், சிந்தூர் ஆபரேஷன் நிறுத்தத்துக்கும் என்ன தொடர்பு?" என்று கூறியிருந்தார்.

### காங்கிரஸ் பரிந்துரை நிராகரிப்பு:
# சசி தரூரை தேர்வு செய்த மத்திய அரசு

புதுடெல்லி, மே 18-

பாகிஸ்தான் மோதல் தொடர்பாக வெளிநாட்டு அரசுகளுக்கு விளக்கமளிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவுக்கு காங்கிரஸ் பரிந்துரைத்த 4 எம்.பி.களைத் தவிர்த்து, மத்திய அரசு சசி தரூரின் பெயரை தேர்வு செய்துள்ளது.

பஹல்காம் தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூரை தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை நிலைப்பாடு குறித்து வெளிநாடுகளுக்கு விளக்கம் அளிக்க அமைக்கப்பட்டிருக்கும் அனைத்துக்கட்சி உறுப்பினர்கள் குழுவினை வழிநடத்த இருக்கும் ஏழு எம்.பி.களில் சசிதரூரும் ஒருவராவார்.

இதுகுறித்த மத்திய அரசின் அறிவிப்பு வெளியான சிறிது நேரத்தில், காங்கிரஸ் கட்சியின் ஊடகப்பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விளக்கம் அளிக்கும் குழுவுக்காக காங்கிரஸ் பரிந்துரைத்த நான்கு பேரில் சசி தரூரின் பெயர் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், "நேற்று (நேற்று முன்தினம்) காலையில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு காங்கிரஸ் தலைவர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து பாகிஸ்தான் பயங்கரவாதம் குறித்து விளக்கம் அளிக்க வெளிநாடு செல்ல இருக்கும் குழுவுக்காக நான்கு எம்.பி.களின் பெயர்களை பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார். மதியம் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சகத்துக்கு, எம்.பி.கள் ஆனந்த் சர்மா, கவுரவ் கோகாய், சையது நசீர் ஹுசைன் மற்றும் அம்ரீந்தர் சிங் ராஜா ஆகியோரை பரிந்துரைத்து கடிதம் எழுதினார்." என்றார்.

முன்னதாக, அனைத்துக் கட்சி குழு குறித்த அறிவிப்பை பகிர்ந்துகொண்ட நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, "மிக முக்கியமான தருணங்களில், பாரதம் ஒற்றுமையாக உள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை என்ற எங்கள் பகிரப்பட்ட செய்தியை எடுத்துச் செல்லும் ஏழு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் விரைவில் முக்கிய கூட்டாளி நாடுகளுக்குச் செல்வார்கள்.

வேறுபாடுகளுக்கு அப்பால், இது அரசியலுக்கு அப்பாற்பட்ட தேசிய ஒற்றுமையின் சக்திவாய்ந்த பிரதிபலிப்பு." என்று தெரிவித்திருந்தார்.

# ரெய்டுகளால் அ.தி.மு.க.வை அசைத்துக்கூட பார்க்க முடியாது
## எடப்பாடி பழனிசாமி காட்டம்

சென்னை, மே 18-

பின்னனப்பட்ட புனைகதைகளின், போலி வழக்குகளின் அடிப்படையில் நடத்தப்படும் இந்த ரெய்டுகள் அ.தி.மு.க. இயக்கத்தை அசைத்து கூட பார்க்க முடியாது என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே சேவூரில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், எம்.எல்.ஏ.வுமான சேவூர் ராமச்சந்திரன் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். சேவூர் பகுதியில் உள்ள ராமச்சந்திரன் இல்லம் மற்றும் அவரது மகன் இல்லத்தில் 20-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இதற்கு கண்டனம் தெரிவித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதிவு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- ஆரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சேவூர் S. ராமச்சந்திரனையும், முன்னாள் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் நீதிபதியையும் குறி வைத்து லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை நடத்தி வருகிறது.

பின்னனப்பட்ட புனைகதைகளின், போலி வழக்குகளின் அடிப்படையில் நடத்தப்படும் இந்த ரெய்டுகள் அ.இ.அ.தி.மு.க. இயக்கத்தை அசைத்து கூட பார்க்க முடியாது. இவை அனைத்தையும் நிச்சயம் சட்டரீதியாக எதிர்கொள்வோம். வெல்வோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் பிரதிநிதியாக குழுவை வழிநடத்துவதில் பெருமை
## தி.மு.க. எம்.பி. கனிமொழி

சென்னை, மே 18-

நாட்டின் பிரதிநிதயாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குழுவை வழிநடத்துவதில் பெருமை என்று கனிமொழி தெரிவித்துள்ளார்.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு விளக்க, காங்கிரசின் சசி தரூர், பா.ஜ.க.வின் ரவி சங்கர், தி.மு.க.வின் கனிமொழி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா சூலே உள்ளிட்டோர் தலைமையில் 7 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

7 குழுக்களும் விரைவில் சர்வதேச சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளதாக மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.



இந்நிலையில், இதுகுறித்து தி.மு.க. எம்.பி., கனிமொழி தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

நமது நாட்டின் பிரதிநிதயாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குழுவை வழிநடத்துவதில் பெருமைப்படுகிறேன். நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் அரசியலமைப்பின் மதிப்புகளை காக்கும் வகையில் தி.மு.க. எப்போதும் பாடுபடும். ஒத்துழைப்பு நல்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், பொறுப்பு தந்த பிரதமர் மோடி, அமைச்சர் உள்ளிட்டோருக்கு நன்றி. நாட்டின் நலனை பொறுத்தவரை நாங்கள் ஒற்றுமையாக, உறுதியாக, தெளிவாக, அசைக்க முடியாதவர்களாக நிற்கிறோம். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கற்பனையை நியாயப்படுத்தவே சோதனை:
# அமலாக்கத்துறைக்கு அமைச்சர் கண்டனம்

சென்னை, மே 18-

1000 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாக வெளியிட்ட தவறான அறிக்கையை நியாயப்படுத்துவதற்காக, அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவன அலுவலர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது என்று அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு, தி.மு.க. ஆட்சியில் டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடுகள் நடைபெற்றதைப் போன்று சித்தரிப்பதற்காக,

அரசியல் உள்நோக்கத்தோடு, கடந்த மாதம் டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனைகளை மேற்கொண்டது.

இந்த சோதனைகளின் போது, முறைகேடுகள் நடைபெற்றதற்கான எந்தவிதமான ஆதாரமும் கிடைக்காத நிலையில், ஆயிரம் கோடி ருபாய் ஊழல் நடைபெற்றதாக ஒரு கற்பனைச் செய்தியை அமலாக்கத் துறை வெளியிட்டது.

இவ்வாறு வெளியிட்ட தவறான அறிக்கையை நியாயப்படுத்துவதற்காக, அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவன அலுவலர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது.



இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் டாஸ்மாக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சிலருடைய வீடுகளில் சோதனைகளை அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ளது.

இந்த சோதனைகளின் போதும், எந்தவிதமான ஆதாரங்களும் கிடைக்காத நிலையில், அரசு அலுவலர்களை அமலாக்கத் துறை தொடர்ந்து துன்புறுத்தியும், கட்டாயப்படுத்தியும் வருகிறது.

அமலாக்கத் துறை மேற்கொண்டுவரும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு, தமிழக அரசின் சார்பாக எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தேவையான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது அலுவலர்களுடன் தமிழக அரசு எப்போதும் துணை நிற்கும், என்று அவர் கூறியுள்ளார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு

சேலம், மே 18-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டு மெல்ல உயரத் தொடங்கியது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், காவிரியின் துணை நதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு, வெள்ளிக்கிழமை காலை வினாடிக்கு 3,306கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர் வரத்து, நேற்று (சனிக்கிழமை) காலை வினாடிக்கு 3,479 கன அடியாக சற்று அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் திறப்பைவிட வரத்து அதிகமாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டு மெல்ல உயரத் தொடங்கியுள்ளது. நீர் வரத்து அதிகரித்துள்ளதால் நேற்று முன்தினம் காலை 108.18அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 108.31 அடியாக சற்று உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 76.03 டிஎம்சியாக உள்ளது.

# ஒரே தேர்வு மையத்தில் 167 பேர் சென்டம்: தேர்வுத்துறை விளக்கம்

சென்னை, மே 18-

தேர்வில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை, முறைகேடு நடப்பதற்கு வாய்ப்பும் இல்லை என்று விழுப்புரம் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பிளஸ்-2 தேர்வு முடிவுகள் கடந்த 8-ந் தேதி வெளியிடப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்தில் 251 பேர் வேதியியல் பாடத்தில் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இது ஆசிரியர்கள், மற்ற மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் அதிக சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கண்ட தேர்வு மையங்களில் மாணவர்கள் முறைகடு செய்ய ஆசிரியர்கள் உதவி செய்திருக்க வேண்டும் அல்லது முன்கூட்டியே வினாத்தாள் கசிந்து மாணவர்களுக்கு விடைகள் தயார் செய்து வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், இந்த முறைகேடுக்கு காரணமானவர்கள் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் எழுந்துள்ளது.

இதற்கு மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அறிவழகன் மறுப்பு தெரிவித்து கூறியதாவது:- செஞ்சி ஒன்றியத்தில் 167 பேர் வேதியியல் பாடத்தில் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் நன்றாக படிக்கக்கூடியவர்கள். மாதந்தோறும் பள்ளி அளவில் குறுந்தேர்வு நடத்தி ஆசிரியர்கள் சிறந்த முறையில் பயிற்சி அளித்துள்ளனர். இதனால் கடந்த அரையாண்டு தேர்விலும் அம்மாணவர்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். வேதியியல் பாடத்தில் வினாக்கள் மிகவும் எளிதாக கேட்கப்பட்டிருந்ததாக பெரும்பாலான மாணவ-மாணவிகள் கூறியிருந்தனர். அனைத்து தேர்வு மையங்களிலும் பறக்கும் படை குழுவினர் தீவிரமாக கண்காணித்தனர். வினாத்தாள் வைக்கப்பட்டிருந்த மையங்களிலும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. ஆகவே தேர்வில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை, என்று அவர் கூறினார்.

# 1,500 அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கோடை சுற்றுலா: பள்ளிக் கல்வித்துறை

சென்னை, மே 18-

அரசுப் பள்ளிகளில் கல்வி, இலக்கியம், விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கிய பிளஸ் 1 வகுப்பை நிறைவு செய்துள்ள 1,500 மாணவர்கள் நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு கோடை சுற்றுலா அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இது குறித்து பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ச.கண்ணப்பன் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: இந்த சிறப்பு பயிற்சி முகாம்கள் நீலகிரி, சேலம் (ஏற்காடு) ஆகிய மாவட்டங்களில் இரு பிரிவுகளாக 5 நாள்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களுக்கு அரசுப் பள்ளிகளில் பிளஸ் 1 வகுப்பை நிறைவு செய்துள்ள மாணவர்களில் கல்வி, இலக்கியம், விளையாட்டு, அறிவியல், விநாடி-வினா போட்டியில் சிறந்து விளங்கிய 1,500 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்காக காத்திருப்போர் பட்டியலும் தயார் செய்யப்பட்டுள்ளது. தேர்வுப் பட்டியலில் உள்ள மாணவர்கள் பங்கேற்காத நிலையில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களை மதிப்பெண் அடிப்படையில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் பரிந்துரைக்கலாம.

சிறப்பு பயிற்சி முகாமில் பங்கேற்பவருக்கு பெற்றோர்களின் ஒப்புதல் கடிதம் அவசியம்.

இதில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உடைமைகள், அடையாள அட்டை போன்றவற்றை தவறாமல் கொண்டுவர வேண்டும். மாணவிகளை அழைத்துச் செல்லும் போது கட்டாயம் 20 பேருக்கு பெண் ஆசிரியர் ஒருவரை அனுமதிக்க வேண்டும். முகாம் நடைபெறும் நாள், இடம் பின்னர் தெரிவிக்கப்படும். பயிலரங்கச் செயல்பாடுகள், பயிற்சிக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நீலகிரி மாவட்டத்துக்கு மாணவிகளும், சேலம் மாவட்டத்துக்கு மாணவர்களும் கோடை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இந்த மாத கடைசி வாரத்தில் கோடை சுற்றுலா சிறப்பு பயிற்சி முகாம்கள் நடைபெறவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


# 21 நாட்களும் தூங்க விடாமல் விசாரணை: பி.எஸ்.எப். வீரரின் மனைவி வேதனை

புதுடெல்லி, மே 18-

பாகிஸ்தான் ராணுவத்தின் பிடியிலிருந்த 21 நாட்களும் இந்திய பி.எஸ்.எப். வீரரிடம் பாகிஸ்தான் அதிகாரிகள் இரவு முழுவதும் விசாரணையை நடத்தியுள்ளது தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 23-ம் தேதி பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்குள் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் பூர்ணம் குமார் ஷா என்பவர் தவறுதலாக எல்லையைக் கடந்து பாகிஸ்தான் வீரர்களிடம் சிக்கிக்கொண்டார். பஞ்சாபின் பெரோஸ்பூரில் உள்ள ஒரு விவசாய நிலத்தில் இருந்தபோது, பூர்ணம் குமார் ஷாவை பாகிஸ்தான் ரேஞ்சர்கள் கைது செய்தனர். இந்தியா தரப்பில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பூர்ணம் குமார் ஷாவை பாகிஸ்தான் கடந்த வாரம் விடுவித்தது. பூர்ணம் குமார் தற்போது தனது வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார்.

இதுகுறித்து பூர்ணம் குமாரின் மனைவி ரஜனி கூறியதாவது: பாகிஸ்தானின் பிடியிலிருந்த 21 நாட்களும் என் கணவரிடம் பாகிஸ்தான் அதிகாரிகள் இரவு முழுவதும் விசாரணையை நடத்தியுள்ளனர். அவரைத் தூங்க விடாமல் செய்துள்ளனர்.



பஞ்சாபின் சர்வதேச எல்லையையொட்டி அமைந்துள்ள பகுதியில் பி.எஸ்.எப். உயர் அதிகாரிகள், வீரர்கள், யார் யார் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்பது குறித்து அவரிடம் துருவித் துருவி விசாரணை நடத்தியுள்ளனர். 17 வருடங்களாக எனது கணவர் பி.எஸ்.எப். துணை ராணுவப் பிரிவில் இருக்கிறார். இனியும் அவர் தனது பணியைத் தொடர்வார். விரைவில் அவர் பணிக்குத் திரும்புவார் என்ற நம்பிக்கை உள்ளது.

அவருக்கு உடல்ரீதியான துன்புறுத்தல்களை பாகிஸ்தான் ராணுவம் தரவில்லை. ஆனால் மனரீதியாக துன்புறுத்தப் பட்டுள்ளார். தங்கியிருந்த 21 நாட்களும் அவரிடம் இரவு முழுவதும் விசாரித்துள்ளனர். அவரை துணை ராணுவப் படையைச் சேர்ந்தவர் என்று அவர்கள் நினைக்கவில்லை. மாறாக உளவாளி என்ற சந்தேகத்திலேயே விசாரித்துள்ளனர். 3 முறை அவரை வெவ்வெறு இடங்களுக்கு மாற்றி விசாரித்துள்ளனர். ஆனால், வேளா வேளைக்கு உணவு கொடுத்துள்ளனர். ஆனால், அவர் பல் தேய்க்க அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்குத் திரும்பியபோது அவர் மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். இவ்வாறு ரஜனி தெரிவித்தார்.

# கயா நகரம் இனி 'கயா ஜி': பீகார் அரசு முக்கிய முடிவு

பாட்னா, மே 18-

பீகாரில் உள்ள கயா நகரம் இனி 'கயா ஜி' என்று அழைக்கப்படும். முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநில அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநிலத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். சித்தார்த், "உள்ளூர் உணர்வுகள், நகரத்தின் வரலாறு மற்றும் மத முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்று கூறினார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐக்கிய ஜனதா தள கட்சியின் தேசிய செயல் தலைவர் சஞ்சய் குமார் ஜா, "பெயரை மாற்றும் இந்த முக்கியமான முடிவுக்காக முதல்வருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 'கயாஜி'யில் வசிக்கும் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்" என்று அவர் கூறினார்.

பா.ஜ.க. எம்.பி ரவிசங்கர் பிரசாத்தும் இந்த முடிவை வரவேற்றுள்ளார். அவர், "கயாவை 'கயாஜி' என்று பெயர் மாற்றும் மாநில அமைச்சரவையின் முடிவு வரவேற்கத்தக்கது மற்றும் பெருமைக்குரியது. இந்த முடிவு கயாவின் மத முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல், சனாதன கலாச்சாரத்திற்கான தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும், மத ஸ்தலங்களைப் பாதுகாப்பதற்கான உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது." என்று தெரிவித்துள்ளார்.

கயா நகரம் அதன் மத முக்கியத்துவத்திற்கு பெயர் பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் 'பித்ரபக்ஷ' காலத்தில் உலகம் முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான மக்கள் மூதாதையர்களின் ஆன்மாக்களுக்கு 'பிண்ட தானம்' வழங்க கயாவிற்கு வருகிறார்கள். கயாவில் உள்ள புத்தகயா, உலகின் மிக முக்கியமான மற்றும் புனிதமான புத்த யாத்திரை மையங்களில் ஒன்றாகும். இங்குதான் போதி மரத்தின் அடியில் கௌதமர் புத்தராக மாறுவதற்கான ஞானத்தை பெற்றார்.

# உ.பி.யில் சோகம்: முடி மாற்று அறுவை சிகிச்சையில் இருவர் பலி: பல் டாக்டர் மீது புகார்

புதுடெல்லி, மே 18-


உ.பி.யில் முடி மாற்று அறுவை சிகிச்சை செய்த பல் மருத்துவரால் இருவர் உயிரிழந்ததாக புகார் எழுந்துள்ளது.

உ.பி.யின் கான் பூரில் டாக்டர் அனுஷ்கா திவாரி நடத்தி வந்த மருத்துவமனைக்கு இளம் பொறியாளர்கள் 2 பேர் சிகிச்சைக்காக வந்துள்ளனர். அவர்களில் உ.பி.யின் பரூக்காபாத்தை சேர்ந்த பொறியாளர் மயங்க் கட்டியார் என்பவர் கடந்த நவம்பர் 18-ல் முடி மாற்று அறுவை சிகிச்சை பெற்றார். ஆனால் 24 மணி நேரத்துக்கு பிறகு முகம் வீங்கி, மயங்கின் உடல்நிலை மோசமடைந்தது. மறுநாள் 19-ல் மயங்க் உயிரிழந்தார். அதேபோல் கான்பூர் பவர் ஹவுஸ் பகுதியை சேர்ந்த பொறியாளர் வினீத் துபேவும், முடி மாற்று அறுவை சிகிச்சை செய்த பிறகு மார்ச் 15-ல் உயிரிழந்துள்ளார். இருவரது குடும்ப உறுப்பினர்களும் டாக்டர் அனுஷ்கா மீது புகார் அளித்தனர். போலீஸார் நடவடிக்கை எடுக்காததால் முதல்வர் ஆதித்யநாத்தின் இணையதளத்தில் புகார்கள் பதிவேற்றப்பட்டன. இதை யடுத்து வினீத் மனைவி அளித்த புகாரின் படி கல்யாண்பூர் பகுதி காவல் நிலையப் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்க தொடங்கி உள்ளனர். இதனால், மருத்துவமனையை மூடி விட்டு அனைவரும் தலைமறைவாகி விட்டனர்.

போலீஸார் நடத்திய விசாரணையில், முடி மாற்று அறுவை சிகிச்சைக்கான எந்த தகுதியும், பயிற்சியும் டாக்டர் அனுஷ்காவுக்கு இல்லை என தெரிந்துள்ளது. இந்த சிகிச்சைக்காக டாக்டர் அனுஷ்கா ஒவ்வொருவரிடம் ரூ.40,000 முதல் ஒரு லட்சம் வரை பெற்றுள்ளார்.

இதுகுறித்து கல்யான்பூர் பகுதி காவல் துறை உதவி ஆணையர் அபிஷேக் பாண்டே கூறும்போது, "டாக்டர் அனுஷ்கா பல் மருத்துவம் மட்டுமே பயின்றவர் என விசாரணையில் தெரிந்துள்ளது. தலைமறைவானவர்களை தீவிரமாக தேடி வருகிறோம்" என்றார். மேலும், உ.பி.யின் மற்ற பகுதிகளில் முடி மாற்று அறுவை சிகிச்சை செய்பவர்களிடமும் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



சமீபத்திய நிகழ்வுகள் குறித்து நாட்டின் பார்வையை முன்வைப்பதற்காக ஐந்து முக்கிய தலைநகரங்களுக்கு செல்ல இருக்கும் அனைத்து கட்சி உறுப்பினர்கள் அடங்கிய குழுவிற்கு தலைமையேற்க மத்திய அரசு அழைத்திருப்பதற்கு பெருமை கொள்கிறேன். தேசத்துக்கு என் சேவை தேவைப்படும்போது அதில் குறைவைக்க மாட்டேன்.

- சசி தரூர்



தமிழ்ப்பாடத்தில் தோல்வியடைந்த 9 மாணவர்களுக்கு போதுமான பயிற்சி வழங்கி துணைத்தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதோடு, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் போதுமான ஆசிரியர்கள் இருப்பதை பள்ளிக்கல்வித்துறையும், தமிழக அரசும் உறுதி செய்ய வேண்டும்.

- டி.டி.வி. தினகரன்



மத்திய அரசு அமைத்த குழுவில் நாங்கள் பரிந்துரைத்த பெயர் இல்லாமல், மற்றொரு பெயரை அறிவித்திருப்பது நேர்மையற்றது. மத்திய அரசு முன்னதாக முடிவு செய்திருந்தாலும் கூட கிரண் ரிஜிஜூ, ராகுல் காந்தி மற்றும் கார்கேயிடம் பேசியிருக்கலாம். எனினும் இதில் நாங்கள் அந்த 4 பேரின் பெயர்களை மாற்றப்போவதில்லை.

- ஜெய்ராம் ரமேஷ்



பா.ம.க.வில் விரைவில் சுமூக சூழல் திரும்பும். நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக முழு முயற்சி எடுத்து வருகிறேன். பா.ம.க.விற்கு நான் ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டேன். தந்தை - மகனிடம் அமைதி பேச்சுவார்த்தை நடத்துகிறேன். விரைவில் ராமதாஸ் - அன்புமணி இருவரும் சந்திப்பார்கள்.

- ஜி.கே.மணி




**தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்தில் வருவாய்த்துறை ஆண்டு 1434 பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது.**

# பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றி தேசியக்கொடி ஊர்வலம்



**தூத்துக்குடி.மே.18.**

தூத்துக்குடியில் தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றி தேசியக் கொடி ஊர்வலம் நடைபெற்றது.

பாகிஸ்தானுக்கு எதிரான சண்டையில் நம் வெற்றியை கொண்டாடும் வகையிலும், நம் வீரர்களின் வீரத்திற்கும், தியாகத்திற்கும், பாராட்டுத் தெரிவிக்கும் வகையிலும், தேசியக் கொடிகளுடன் ஆபரேஷன் சிந்தூர் யாத்திரை நடத்தப்படும் என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் அறிவித்திருந்தார். அதன்படி தூத்துக்குடியில் தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் தேசியக்கொடி ஊர்வலம் நடைபெற்றது. புதிய மாநகராட்சி முன்பு தொடங்கிய ஊர்வலம் முக்கிய வழியாக சிவன் கோவில் தேரடியை அடைந்தது. ஊர்வலத்தில் சிறப்பு விருந்தினராக முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

இதில், மாவட்ட தலைவர் சித்ராங்கதன், விவேகம் ரமேஷ், மாவட்ட பொதுச் செயலாளர்கள் கனல் ஆறுமுகம், செல்வராஜ், மாவட்ட துனை தலைவர்கள் சிவராமன், வாரியார், தங்கம், மாசானம், முத்துராமலிங்கம், நவமணிகண்டன், சரஸ்வதி, மாவட்ட செயலாளர்கள் ஜெயாநாச்சியார், வசந்தி, பானுமதி மோகன், மாவட்ட பொருளாளர் பரமசிவன், மண்டல் தலைவர்கள் ராஜேஷ் கனி, லிங்கசெல்வம், சுதா மாதவன், சங்கர குமாரஜயன், பேச்சிதுரை, தங்ககண்ணன், சிவஜோதிபாண்டியன், சரவணன், சங்கர் செல்வசங்கர், நிகழ்ச்சி பொருப்பாளர்கள், ராஜேஷ் சின்னதங்கம் மாரியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# எஸ்.தங்கப்பழம் வேளாண்மை கல்லூரியில் 38 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை



**தென்காசி மே.18:**

வாசுதேவநல்லூரில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்துடன் இணைந்து, தமிழக அரசின் அனுமதியுடன் கே. சுப்பிரமணியநாடார் - வடிவுஅம்மாள் கல்வி அறக்கட்டளையின் கீழ் செயல்பட்டுவரும் எஸ்.தங்கப்பழம் வேளாண்மை கல்லூரியில், "சத்தியம் அக்ரோகிளினிக்" நேர்காணல் சிறப்பாக நடைபெற்றது.

இந்தநிகழ்வில், தமிழகம் முழுவதும் பணியிடங்கள் கொண்ட "சத்தியம் அக்ரோ கிளினிக்" நிறுவனம் அக்ரி டாக்டர் பதவிக்கான நேர்முகத்தர்வுகளை நடத்தினர்;. நேர்காணலை பிரவீன் மோஹன் (பொதுமேலாளர் -மனிதவளம்), சரவணகுமார் (மண்டலத் தலைவர் -விற்பனை), மற்றும் சுரே~;குமார் (மாநிலமேலாளர் - மனிதவளத்துறை) ஆகியோர் நடத்தினர்.

கல்லூரி வளாக நேர்காணலில் 38 மாணவர்கள் தேர்ச்சிபெற்று, பணிநியமன ஆணைகளை பெற்றனர். இந்த முகாம் மாணவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், முன்னணி வேளாண்மை நிறுவனங்களுடன் கல்லூரி வைத்திருக்கும் உறவுகளை வலுப்படுத்துவதாகும் என எஸ்.தங்கப்பழம் கல்வி நிறுவனங்களின் செயலாளர் எஸ்.டி.முருகேசன் தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு முக்கியமான அம்சமாக, மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்க இன்னும் மூன்றுமாதங்கள் உள்ளநிலையில், பணிநியமன ஆணை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக மாணவர்கள் கல்லூரி செயலாளருக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டனர். தென்காசி எஸ்.தங்கப்பழம் வேளாண்மைகல்லூரியின் வெற்றிகரமான கல்லூரி வளாகநேர்காணல் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் செயல்பட்டுவரும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்துடன் இணைக்கப்பட்ட மாநிலஅரசின் அங்கீகாரம் பெற்ற எஸ்.தங்கப்பழம் வேளாண்மை கல்லூரியில், இறுதி ஆண்டு வேளாண்மை மாணவர்களுக்கான கல்லூரி வளாகநேர்காணல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.இந்தநிகழ்வு ஆர்கானிக் வேளாண் உற்பத்தியில் முன்னணியில் உள்ள நிறுவனங்களுடன்இணைந்து மேற்கொள்ளப்பட்டது. கள ஆலோசகர் (உரம்) பணியிடங்களுக்கான நேர்காணல் நிறுவனத்தின் மூத்தநிர்வாக அலுவலர் கோபி மற்றும் துணைவாடிக்கையாளர் ஆதரவு மேலாளர் யாதுராஜ் ஆகியோரின் முன்னிலையில் நடத்தப்பட்டது. எழுத்துத் தேர்வின் அடிப்படையில் 22 ஆண்கள் மற்றும் 21 பெண்கள் என மொத்தம் 43 மாணவர்கள் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வான மாணவர்களுக்கு பணிநியமன ஆணைகள். வரும் வார இறுதியில் நடைபெற உள்ள பெற்றோர் ஆசிரியர் சந்திப்புநிகழ்வில் எஸ்.தங்கப்பழம் கல்வி நிறுவனங்களின் செயலாளர் எஸ்.டி.முருகேசன் வழங்கவுள்ளார். இந்நிகழ்வை முன்னெடுத்த நிறுவனங்களுக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்த எஸ்.டி.முருகேசன் மாணவர்களுக்கு உயர்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இதுபோன்ற முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். நேர்காணலில் பங்கேற்ற மாணவர்கள், இது அவர்களுக்கு புதிய அனுபவமாகவும், தன்னம்பிக்கையை உருவாக்கியதாகவும் தெரிவித்தனர். மேலும், தொழில்துறை நிபுணர்களுடன் நேரடியாக பேசும் வாய்ப்புகிடைத்தைக் குறிப்பிட்டு, மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

# 11ம் வகுப்பு தேர்வில் சாதனை படைத்த ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி



**குற்றாலம் மே.18 :**

பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 2025-ஆம் ஆண்டு நடைபெற்ற +1 பொதுத்தேர்வில் 175 மாணவர்கள் தேர்வு எழுதினர்.

பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களில் அக் ஷய் துரை , சமிஹா ஆகிய இருவரும் 589 /600 மதிப்பெண்கள் பெற்று முதல் இடத்தையும், சிவ ஹரிஷ் 588/600 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும் , நிஷோக் 587 /600 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.தேர்வு எழுதிய 175 பேரில் 18 மாணவர்கள் 550 மதிப்பெண்களுக்கு மேலும், 72 மாணவர்கள் 500 மதிப்பெண்களுக்கு மேலும் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர்.

பாடவாரியாக 100க்கு 100 மதிப்பெண்கள் பட்டியல்

1. கணினி அறிவியல் : 12 மாணவர்கள்
2. கணிதம் : 03 மாணவர்கள்
3. இயற்பியல் : 02 மாணவர்கள்
4. வணிகவியல் : 02 மாணவர்கள்
5. கணினி பயன்பாடுகள் : 02 மாணவர்கள்

பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்களைப் பள்ளியின் தாளாளர் ஆர்.ஜே.வி பெல், செயலாளர் . கிரேஸ் கஸ்தூரி பெல் , பள்ளியின் சீனியர் மிஸ்டர்ஸ் செல்வி தன்ராஜ் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் பாராட்டி மகிழ்ந்தனர்.



**கடையநல்லூர் நகர ஒன்றாவது வார்டு அதிமுக செயலாளர் இசக்கியின்மகன் பிரவீன் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 490/500 மதிப்பெண் எடுத்து சாதனை புரிந்துள்ளார். அவரை சவுதி அரேபியா அம்மா பேரவை செயலாளர் எஸ்.எம்.மைதீன் பொன்னாடை போர்த்தி மாணவனை பாராட்டினார்.**

# செங்கோட்டை நித்திய கல்யாணி அம்மன் கோவிலில் திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி இன்று நடக்கிறது

**தென்காசி மே.18:**

செங்கோட்டை ஸ்ரீ நித்திய கல்யாணி அம்மன் திருக்கோவில் இன்று (மே.18) காலை 9.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி சிவ வாசகி சிவ பகவதி அம்மா தலைமையில் நடைபெறுகிறது மேலும் மாலை 5.30 மணிக்கு திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சாய் சித்தா கிளினிக் மருத்துவர் கலா, ராம்நாத் டெய்லர் ராம்நாத், போட்டோ எடிட்டர் சிவ. தேவி ஆகியோர் செய்திருக்கின்றனர். பொதுமக்கள் அனைவரும் திருவாசக முற்றோதல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# தென்காசி நகராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கசடு கழிவு அகற்றும் வாகனம்

## நகர்மன்ற தலைவர் சாதிர் துவக்கி வைத்தார்



தென்காசி மே.18:

தென்காசி நகராட்சி பயன்பாட்டிற்காக கசடு கழிவு அகற்றும் வாகனம் புதிதாக வாங்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நச்சு தடைத் தொட்டிகளை சுத்தம் செய்யும் வாகனம் தூய்மை இந்தியா திட்டம் -(நகர்புறம்) மூலமாக புதிதாக வாங்கப்பட்டு பயன்பாட்டிற்காக நகர் மன்றத் தலைவர் சாதிர் கொடியசைத்து துவக்கி வைத்தார். நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வைத்தார்,

நிகழ்ச்சியில் நகராட்சி பொறியாளர் ஹசீனா, சுகாதார அலுவலர் முகமது இஸ்மாயில், சுகாதார ஆய்வாளர்கள் கணேசன், மாரிமுத்து, நகர்மன்ற உறுப்பினர்கள் காதர் மைதீன், முப்புடாதிரஞ்சித், ஜெயலட்சுமிசாமி, சங்கரசுப்பிரமணியன், லெட்சுமண பெருமாள், மஞ்சுளா, முருகன், மகேஸ்வரி, ஆசிக்முபினா, ரெஜினா, சுனிதா,கல்பனா, கார்த்திகா, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் துரைசாமி, சுடலை, முத்துமாரியப்பன், முத்து,சுப்பிரமணியன், ஓட்டுநர்கள் சிவகுமார், சுடலைக்கனி, முரளி ஸ்ரீகாந்த், கபூர், மதிமுக மாவட்ட அவை தலைவர் வெங்கடேஸ்வரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் பாலாமணி, மாவட்ட பொறியாளர் அணி தலைவர் தங்கபாண்டியன், வர்த்தகஅணி சன் ராஜா, இளைஞரணி முரளி, காங்கிரஸ் பிரேம்குமார், காமில், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் கருப்பசாமி, கங்காதரன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்த வாகனம் மூலம் நகராட்சி பகுதியில் உள்ள இலவச பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் உள்ள நச்சு தடைதொட்டிகள் கால முறையில் சுத்தம் செய்யப்படுவதோடு வாகனம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் உரிய கட்டணம் நிர்ணயித்து அந்த கட்டணத்தை பொதுமக்கள் செலுத்தி விண்ணப்பிக்கும் போது வாகனம் பணிக்கு சுழற்சி முறையில் அனுமதிக்கப்படும்.

பொதுமக்களும் இந்த வாகனத்தை பயன்படுத்தி தங்களது வீடுகளில் வணிக நிறுவனங்களில் உள்ள நச்சு தடை தொட்டிகளை சுத்தம் செய்து கொள்ளலாம்.

இந்த வாகனம் மூலம் சுத்தம் செய்யும் போது அந்த கழிவுகள் முறைப்படி பாதுகாப்பான முறையில் நகராட்சியின் கசடு கழிவு மேலாண்மை மையத்திற்கு கொண்டு சேர்க்கப்பட்டு அங்கு அவை முறையாக சுத்திகரிக்கப்பட்டு உரமாக்கப்படும்.

எனவே, இந்த சேவையை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறும், நகராட்சிகளின் சேவைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் நகர் மன்றத் தலைவர் சாதிர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆப்ரேஷன் சிந்தூர் வெற்றி: தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் கொண்டாட்டம்



தென்காசி மே.18 :

பாகிஸ்தானின் தீவிர வாத செயலுக்கு எதிராக ராணுவம் மேற்கொண்ட ஆப்ரேஷன் சிந்தூர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி தலைமையில் தென்காசி பழைய பேருந்து நிலையத்திலிருந்து தென்காசி மேலப்புலியூர் வரை தேசியக் கொடியுடன் பேரணியாக சென்று ராணுவ வீரர்களுக்கு வாழ்த்துக் கூறி வெற்றி கோஷங்கள் எழுப்பப்பட்டன

கூட்டத்திற்க்கு மாவட்ட பொதுச் செயலாளர்கள் பால குருநாதன், பால ஸ்ரீனிவாசன், மாவட்ட பொருளாளர் கோதை மாரியப்பன், மாநில செயற்குழு உறுப்பினர் அன்புராஜ் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்டத் துணைத் தலைவர்கள் முத்துக்குமார், சுப்பிரமணியன், பாலமுருகன், புலிக்குட்டி, தர்மர், மாவட்டச் செயலாளர்கள் முப்புடாதி, மந்திர மூர்த்தி, மரகதா, மகாலட்சுமி, அருணாசலம், சண்முகராஜ். முன்னால் மாவட்ட பொதுச் செயலாளர் ராமநாதன், மண்டல் தலைவர்கள் பாப்பாகுடி சுமித்ரா, கடையம் மேற்கு முருகன், கடையம் கிழக்கு வைகுண்டராஜா. ஆலங்குளம் தெற்கு குமரகுருபரன். கீழப்பாவூர் கிழக்கு மாரிமுத்து, சரண்டை நகர் கணேசன், ஆலங்குளம் வடக்கு சரவணவேல் முருகையா, கீழப்பாவூர் தஷிணாமூர்த்தி, செங்கோட்டை நகர் முத்து மாரியப்பன், செங்கோட்டை ஒன்றியம் பால்ராஜ், கடைய நல்லூர் ஒன்றியம் செல்வகுமார் , புளியங்குடி நகர் ஆர்த்தி , வாசுதேவநல்லூர் வடக்கு கணேசன், சங்கரன் கோயில் தெற்கு சிவா, குருவிகுளம் வடக்கு வீரகுமார், குருவிகுளம் தெற்கு குட்டி ராஜ் , சங்கரன்கோயில் நகர் உதயகுமார், மேலநீலிதநல்லூர் பரம சிவன், மற்றும் அணி பிரிவு கிளை கமிட்டி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். தென்காசி நகர தலைவர் சங்கர சுப்ரமணியன் நன்றி கூறினார்

# 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி சாதனை



**குற்றாலம் மே.18:**

10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவி சந்தியா பிரியா 97% பெற்று பள்ளியின் முதல் மாணவியாக சாதனை படைத்துள்ளார். மாணவி ஷைனி பிரீத்தி 96.4% பெற்று இரண்டாம் இடமும், சிவதர்ஷினி 96% பெற்று மூன்றாம் இடமும் பெற்று சாதனை படைத்துள்ளனர். மேலும் பாடவாரியாக தமிழில்–95, ஆங்கிலத்தில்-99, கணிதத்தில் - 98, அறிவியலில்-99, சமூக அறிவியலில்-98 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சாதனை படைத்த மாணவ-மாணவியரை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதா பிரியா, தலைமை ஆசிரியர்; செல்வலிங்கம், பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்

10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் 10 இடங்கள் பெற்று சாதனை படைத்த மாணவ-மாணவியருக்கு பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன் வெற்றிக் கோப்பையை வழங்கி பாராட்டினார்.

# எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியில் முப்பெரும் விழா



**தென்காசி மே.18 :**

எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் பணி ஆணை வழங்கும் நிகழ்வு மற்றும் மாணவர்களின் கிராமத் தங்கல் திட்டத்தினைக் காட்சிப்படுத்தும் விழா எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான பெற்றோர் - ஆசிரியர் கலந்துரையாடல், வளாக நேர்முகத்தேர்வில் வெற்றி பெற்றோருக்கான பணி ஆணை வழங்கும் விழா மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் தங்கள் கிராமத்-தங்கல் திட்டத்தில் பயின்றவற்றை காட்சிப்படுத்துதல் என முப்பெரும் விழாவாக நடைபெற்றது.

எஸ்.டி. கல்விக்குழுமங்களின் செயலர் எஸ்.டி. முருகேசன் இவ்விழாவினைத் தலையேற்று நடத்தினார். கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் ஜெயராஜன் நெல்சன், ஆலோசகர் பேராசிரியர் இராமலிங்கம் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் 80 பெற்றோர் கலந்து கொண்டு முதல்வர் மற்றும் பேராசிரியர்களிடம் கலந்துரையாடினர்.

மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் திட்டமிட்டு கல்வி அளித்து வருவதாக கல்லூரி நிர்வாகத்திற்கும் பேராசிரியர்களுக்கு நன்றி உரைத்தனர். மேலும், சமீபத்தில் கல்லூரியில் நடைபெற்ற நேர்முக வளாக வேலைவாய்ப்பு தேர்வில் வெற்றி பெற்றோருக்கான பணியாணையினை மொத்தம் 38 மாணவ, மாணவிகளுக்கு அவர்களது பெற்றோர்களின் முன்னிலையில், கல்விக்குழு செயலர் எஸ்.டி.முருகேசன் பெருமையுடன் வழங்கினார்.மேலும், இவ்விழாவில், பேராசிரியர்கள் எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியில் வழங்கப்படும் பணி சார்ந்த கல்வி குறித்தும், எஸ்.தங்கப்பழம் ஐ.ஏ.எஸ் அகாடெமியில் வழங்கப்படும் சிறப்பு வகுப்புகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

இறுதியாக இறுதியாண்டு மாணவர்கள் தாங்கள் கிராமத் தங்கல் திட்டத்தில் கற்றவற்றை காட்சிப்படுத்தியிருந்தார். தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டம் உள்ளிட்ட கடையம், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்தராயிருப்புஉள்ளிட்ட 13 சுற்று வட்டார கிராம பகுதிகளில் விவசாயத்தை நேரடியாக விவசாயிகளிடமிருந்து கற்றுக் கொள்ளும் வகையில் கிராம தங்கள் திட்டத்தின் கீழ் தாங்கள் கற்று கொண்டதை இந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தினர்.

இந்த கண்காட்சியில், விவசாய பொருட்கள், பனை மரத்தின் பயன்கள் அதனால் கிடைக்கக்கூடிய பொருட்கள், விவசாய நிலங்களில் சொட்டு நீர் பாசன முறைகள், பயிர்கள் சாகுபடி குறித்த முறைகள் உள்ளிட்டவைகளை தத்ரூபமாக காட்சிப்படுத்தினர்.

குறிப்பாக மழை நீரை சேமித்து, அதன் வாயிலாக பயிர் பாசன முறைகள் இதில் தத்துருவோமாக காட்சிப்படுத்தியது அனைவரையும் ஈர்த்தது. இந்த நிகழ்ச்சி பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் பங்கேற்ற நிலையில் மாணவர்களின் விவசாய காட்சிப்படுத்துதல் முறை அனைவரையும் அசத்தியது.விழாத் தலைவர்கள் மற்றும் பெற்றோர் இவற்றைக் கண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

விழா ஏற்பாட்டினை மாணவர் ஆலோசகர் உதவிப் பேராசிரியர் விக்னேஷ் குமார், மாணவர் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் ஆண்ட்ரூ பீட்டர் லியோன் மற்றும் வினோதினி ஆகியோர் செய்திருந்தனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.11.34 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் ஆர்.அழகுமீனா நேரில் ஆய்வு



கன்னியாகுமரி,மே.18-
கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தோவாளை வட்டம் உடையடி பகுதியில் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்-

கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் மூலம் புதிய வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கிராம அறிவு சார் மையம் உள்ளிட்டவைகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தாட்கோ மூலம் உடையடி ஆதிதிராவிடர்நல நடுநிலைப்பள்ளியில் ரூ.1.63 கோடி மதிப்பில், 8 வகுப்பறையும், ரூ.18.60 இலட்சம் மதிப்பீட்டில் தக்கலை ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியிலும், ரூ.21.00 இலட்சம் மதிப்பில் பேச்சிப்பாறை பழங்குடியினர் பெண்கள் பள்ளி விடுதியிலும், ரூ.22.50 இலட்சம் மதிப்பில் பத்துகாணி பழங்குடியினர் பெண்கள் பள்ளி விடுதியிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ரூ.1.59 இலட்சம் மதிப்பில் மணலோடை பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் 4 வகுப்பறைகளும் 1 அறிவியல் ஆய்வு கூடமும், ரூ.2.62 கோடி மதிப்பில் பத்துகாணி பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகளும், 2 அறிவியல் சோதனை கூடங்களும், ரூ.55 இலட்சம் மதிப்பில் கலிங்கராஜபுரம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 1 அறிவியல் ஆய்வுக்கூடமும், ரூ.2.59 கோடி மதிப்பில் வாழையத்துவயல் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகளும் 2 கழிவறைகளும், ரூ.77.89 இலட்சம் மதிப்பில் ஆரல்வாய்மொழி கிராமத்தில் அறிவு சார் மையமும் கட்டப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து பேச்சிப்பாறை பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.8.40 இலட்சம் மதிப்பில் பள்ளி தலைமை ஆசிரியர் / காப்பாளர் இல்லம் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ரூ.24.60 இலட்சம் மதிப்பில் பூதப்பாண்டி ஆதிதிராவிடர் நல பெண்கள் விடுதியும், ரூ.42.55 இலட்சம் மதிப்பில் மணலோடை பழங்குடியினர் பள்ளியில் ஆண்கள் விடுதி மறு சிரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. ரூ.2.60 இலட்சம் மதிப்பில் நாகர்கோவில் ஆதிதிராவிடர் நல கல்லூரியில் ஆண்கள் விடுதிகள் யூனிட் 1 மற்றும் யூனிட் 2 –ல் கழிவறைகள் பணிகள் என மொத்தம் ரூ.11.34 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தோவாளை வட்டம் உடையடி ஆதிதிராவிடர்நல நடுநிலைப்பள்ளியில் ரூ.1.63 கோடி மதிப்பில், 8 வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாணாக்கர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்கள், ஒப்பந்தாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையும் 2025- 2026-ஆம் கல்வி ஆண்டில் மாணவர் மாணவியர் சேர்க்கைக்கு முன்பாக முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு, விடுதிகள் தயார் நிலையில் இருக்க வேண்டுமென துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.நடைபெற்ற ஆய்வில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தி.மோகனா, துறை அலுவலர்கள், ஒப்பந்தாரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ஹெராயின் போதைப்பொருள் விற்ற 3 பேர் கைது

சென்னை மே 18-
சென்னை பெருநகர காவல், கீழ்பாக்கம் காவல் துணை ஆணையர் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், கீழ்பாக்கம் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினர் மற்றும் பெரியமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, பட்நூல் சந்துஷா தெரு அருகில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 4 நபர்களை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் ஹெராயின் என்ற போதைப் பொருளை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், பெரியமேடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதமாக ஹெராயின் போதைப்பொருள் வைத்திருந்த 1.ஷரிப் மியா, 2.முகமது உசேன், 3.சாஹரர் தேப்நாத், ஆகிய மூவரை கைது செய்தனர்.

மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். இவர்களிடமிருந்து 14.97 கிராம் எடை கொண்ட ஹெராயின் மற்றும் 3 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணைக்குப் பின்னர் எதிரிகள் மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இளஞ்சிறார் நீதிக்குழுமத்திலும் ஆஜர் செய்யப்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து நமக்கு பெருமை
நாட்டைச் சுத்தமாக வைப்பது நமது கடமை

# 10-ம் வகுப்பு பொது தேர்வு: கோவில்பட்டி கவுணியன் மெட்ரிகுலேஷன் பள்ளி 100 சதவீத தேர்ச்சி



கோவில்பட்டி மே 18
கோவில்பட்டி ராஜீவ் நகரில் அமைந்துள்ள கவுணியன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அஸ்வின் கார்த்திக் 492/500, தன்யா ஸ்ரீ 489/500 ,தேநிசா 480/500 ஆகியோர் முதல் மூன்று இடத்தை பிடித்துள்ளனர்.

ஆங்கிலம் பாடத்தில் விதியாலட்சுமி நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்துள்ளார்.

சமூக அறிவியல் பாடத்தில் இரண்டு பேர் அஸ்வின் கார்த்திக் , முத்து பிரியா நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று சிறப்பித்துள்ளனர்.

பதினோராம் வகுப்பில் தேர் எழுதிய அனைத்து மாணவர்களும் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர்.

விஷாலி 588/600, கல்வி மாவட்ட அளவில் முதலிடம், வைரமுத்து 562/600,யமுனா,மனோஜ் 561/600 முதல் மூன்று இடத்தை பெற்றுள்ளனர். மேலும் பொருளியலில் விஷாலி 100க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளார்.

தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கு பள்ளி முதல்வர் கோ.பாலு, தாளாளர் மெஹர் பாலு இயக்குனர் டாக்டர் அரபிந்தோ , டாக்டர் சஹானா, கல்வி சார் முதல்வர் க பாண்டித்துரை மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பாராட்டினார்கள்.

# திருவேங்கடம் ஸ்ரீ கலைவாணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீத தேர்ச்சி



சங்கரன்கோவில், மே.18
திருவேங்கடம் ஸ்ரீ கலைவாணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு பொது தேர்வில் மாணவி லக்க்ஷனா சென் 500 க்கு 496 மதிப்பெண் பெற்று தென்காசி மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார் மற்றும். அந்த மாணவி பெற்ற மதிப்பெண் தமிழ் 99,ஆங்கிலம் 98, கணிதம் 99, அறிவியல் 100, சமூக அறிவியல் 100 பெற்றுள்ளார். காயத்ரி 500க்கு 493 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடம் பிடித்துள்ளார் மற்றும் நிவேதிதா 500க்கு 492 மதிப்பெண் பெற்று மூன்றாம் இடம் பெற்றுள்ளார் தேர்வு எழுதிய 256 மாணவர்களும் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். 450 மதிப்பெண்ணிற்கு மேல் எடுத்த மாணவர்கள் 78 நபர்கள், 400க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் 148 நபர்கள் பாட வாரியாக முதல் மதிப்பெண் தமிழ் 99 மதிப்பெண் 4 நபர், ஆங்கிலம் 99 மதிப்பெண் 5 நபர், கணிதம் 99 மதிப்பெண் 4 நபர், அறிவியல் 24 மாணவர்கள் 100 மதிப்பெண், சமூக அறிவியல் 12 மாணவர்கள் 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் சிறப்பான மதிப்பெண் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ மாணவிகளை பள்ளி நிர்வாகி மற்றும் முதல்வர் பொன்னழகன் மற்றும் ஆசிரியர் ஆசிரியைகள் பொது மக்கள் பாராட்டினர்.



கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றதையொட்டி வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பள்ளிச் செயலாளர் செல்வம், பொருளாளர் பாஸ்கரன், பள்ளி நிர்வாக குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், கண்ணன் மற்றும் ரவி மாணிக்கம் பள்ளி முதல்வர் பிரபு, ஆசிரியர்கள் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசளித்து பாராட்டு தெரிவித்தனர். அலுவலர்கள், பெற்றோர்கள் உட்பட்டோர் கலந்து கொண்டனர்.

# நெடுஞ்சாலைத்துறை பணிகளை துறை உள் தணிக்கை குழுவினர் ஆய்வு



தென்காசி மே.18:
தென்காசி (நெ) க(ம)ப, கோட்டம், தென்காசி (நெ) க(ம)ப உட்கோட்டம் மூலம் 2024-25ம் நிதியாண்டில் நடைபெற்ற சாலைப் பணிகளை துறையின் உள் தணிக்கை குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

இக்குழுவினர் தென்காசி உட்கோட்ட பராமரிப்பில் உள்ள ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாடு செய்தல் திட்டம் 2024-25ன் கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ள திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலையில் ஆய்வு மேற்கொண்டனர். இதில் மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அளவுகளின் படி பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும், சாலையின் தரம் குறித்தும் துறை உள் தணிக்கை குழு அதிகாரியான சரவணன், கண்காணிப்புப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் சேலம் அவர்கள் தலைமையில் ஆய்வு குழு அதிகாரிகள் மதுரை (நெ) திட்டங்கள் கோட்டப் பொறியாளர் கேசவன், தென்காசி (நெ) திட்டங்கள் உதவிக் கோட்டப் பொறியாளர் ஜெகன் செல்வராஜன், தென்காசி (நெ) திட்டங்கள் பிரிவு-1 இளநிலைப் பொறியாளர் முருகலிங்கம் மற்றும் தூத்துக்குடி (நெ) திட்டங்கள் இளநிலைப் பொறியாளர் (நெ)அம்ஜித்கான் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மேற்படி ஆய்வில் தென்காசி (நெ) க(ம)ப கோட்டப் பொறியாளர் சுரேஷ்பாபு, உதவிக் கோட்டப் பொறியாளர் திருவருள்செல்வன், உதவிப் பொறியாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெயிலில் அலையாமல் வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் வழியில் மின் கட்டணம் செலுத்தலாம்



சங்கரன்கோவில், மே.18-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகர் பகுதி மின் நுகர்வோர்களுக்கு ஆன்லைன் வழியில் மின்கட்டணம் செலுத்தும் நடைமுறை பற்றிய நேரடி விளக்கமும் கடும் வெயிலில் நேரடி பணம் செலுத்தும் முறையில் நேரம் மிச்சமாவதை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வாக கட்டணம் செலுத்த வந்த மின்நுகர்வோருக்கு தண்ணீர் பாட்டில், மோர் ஆகியவை நகர்- 1 பிரிவு அலுவலகம் சார்பில் வழங்கப்பட்டது. மின் நுகர்வோரின் பொன்னான நேரத்தை வீணாக்காமல் கடும் கோடை வெயிலில் அலையாமல் தங்களது வீட்டிலிருந்தபடியோ அல்லது உலகின் எந்த ஒரு இடத்திலிருந்தும் ஆன்லைன் வழியில் தங்களது வீடு, வணிகம், தொழிற்சாலை மின் கட்டணத்தை போன் பே, ஜீ பே, TNPDCL வெப்சைட் வழியில் தங்களது மின்கட்டணத்தை செலுத்தும் நேரடி வழிகாட்டுதலை மின்நுகர்வோருக்கு உதவி பொறியாளர் கருப்பசாமி, சிறப்புநிலை முகவர் பொன் சுப்புராஜா, வருவாய் மேற்பார்வையாளர் கந்தசாமி, வணிக ஆய்வாளர் ராஜராஜன், மின் பாதை ஆய்வாளர் அரிராஜ், வணிக உதவியாளர் முருகன் ஆகியோர் ஆண்ட்ராய்டு செல்போன் மூலமாக விளக்கி கூறினர்.

# கோவில்பட்டி அஞ்சல் கோட்டக்தில் ஊழியர்களுக்கு சாதனையாளர் விருது: கோட்ட கண்காணிப்பாளர் சுரேஷ்குமார் வழங்கினார்



கோவில்பட்டி மே 18
கோவில்பட்டி அஞ்சல் கோட்டம் 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கோவில்பட்டி சங்கரன்கோவில் தென்காசி ஆகிய மூன்று தலைமை அஞ்சலகங்கள் மற்றும் 61 துணை அஞ்சலகங்கள் 280 கிளை அஞ்சலகங்கள் தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடித சேவை மட்டுமின்றி சேமிப்பு கணக்கு அஞ்சல் ஆயுள் காப்பீடு இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கி சேவை ஆதார் புதுப்பித்து பாஸ்போர்ட் பயிர் காப்பீடு உட்பட ஏராளமான பணிகள் செய்து வருகிறது . 2023-20 24 ஆண்டிற்கான சாதனையாளர் விருதை வழங்கி கோவில்பட்டி அஞ்சல் கோட்டத்தில் பணியாற்றும் அஞ்சலக ஊழியர்களை கௌரவிக்கும் பொருட்டு கோவில்பட்டி லட்சுமி திருமண மண்டபத்தில் பாராட்டு விழா நடந்தது. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் மாணவிகளுக்கு கோவில்பட்டி கோட்ட அஞ்சலக கண்காணிப்பாளர் சுரேஷ்குமார் பாராட்டி பரிசுகள் வழங்கினார்.

அஞ்சலக ஊழியர்கள் பொதுமக்கள் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
க. ஆரோக்கியசாமி,
த.பெ. கபிரியேல்,
க.எண். 162, திருவுடையான் சாலை, சங்கரன்கோவில்.
மனுதார்,
1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,
2. சார் பதிவாளர், மேல நீலிதநல்லூர்,
எதிர்மனுதாரர்,
**அறிவிப்பு**
எனது தாயார் பேச்சியம்மாள், க.பெ. கபிரியேல் என்பவர் கடந்த 04.09.2008 அன்று 94பி, நடுத் தெரு, பட்டாடைகட்டி கிராமம், சங்கரன்கோவில் வட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
க. ஆரோக்கியசாமி, சங்கரன்கோவில்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
அ.தி.மு.ஆ1/12/2025
அ. மணிமுத்துக்குமார்,
த.பெ. அழகுமலை,
க.எண். 4-7/10ஏ, வடக்கு தெரு, அருகன்குளம், தென்மலை பாகம் 1, சிவகிரி வட்டம்.
மனுதார்,
1. வட்டாட்சியர், சிவகிரி,
2. சார் பதிவாளர், கரிவலம் வந்த நல்லூர்,
எதிர்மனுதாரர்,
**அறிவிப்பு**
எனது தாத்தா காளிமுத்து தேவர், த.பெ. சுந்தரத்தேவர் என்பவர் கடந்த 30.09.1972 அன்று 4-7/10ஏ, வடக்கு தெரு, அருகன்குளம், தென்மலை பாகம் 1, சிவகிரி வட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
அ. மணிமுத்துக்குமார், அருகன்குளம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
ஹரி கிருஷ்ணன்,
தபெ. கணேசன்,
க எண்.4/475, ஸ்ரீநாத் நகர், பன்னீர் குளம் கிராமம், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கயத்தார்.
எதிர்மனுதாரர்கள்
**அறிவிப்பு**
எனது மகள் திவ்யா என்பவர் கடந்த 31.01.1990. அன்று மேற்படி முகவரியில் வைத்து பிறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
ஹரி கிருஷ்ணன், மனுதார்,

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், தென்காசி,**
RDOTKS. இ.ப.வ. எண். 332/2024
க .ரவிக்குமார்,
த.பெ. கருப்பசாமி,
க.எண். 3/168, மாஞ்சோலை டிவிசன், மாஞ்சோலை - 627420 , தெற்கு கல்லிடைக்குறிச்சி.
மனுதார்,
1.வட்டாட்சியர், கடையநல்லூர்,
2.சார்பதிவாளர், புளியங்குடி,
எதிர்மனுதாரர்,
**அறிவிப்பு**
எனது தந்தை கருப்பசாமி, த.பெ. சப்பாணி என்பவர் கடந்த 02.03.2003 அன்று 7/c, துரைச்சாமியாபுரம் காலனி, முள்ளிக்குளம் அஞ்சல், கடையநல்லூர் வட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
க.ரவிக்குமார், மாஞ்சோலை.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
ந. கௌதமி,
க.பெ. நம்பிராஜன்,
க.எண். 41/35, வடக்கு தெரு, புளியம்பட்டி, களப்பாகுளம் கிராமம், சங்கரன்கோவில் வட்டம்.
மனுதார்,
1. வட்டாட்சியர், திருவேங்கடம்,
2. சார் பதிவாளர், கரிவலம்வந்தநல்லூர்,
எதிர்மனுதாரர்,
**அறிவிப்பு**
கௌதமி, த.பெ மோசஸ் ஆகிய நான் கடந்த 10.05.1987 அன்று 2/230, தெற்கு தெரு, அழகாபுரி கிராமம், சிதம்பராபுரம் மஜரா, திருவேங்கடம் வட்டம் என்ற முகவரியில் வைத்து பிறந்ததை எதிர்மனுதாரரின் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ந. கௌதமி, புளியம்பட்டி.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
ச. சண்முகச்சாமி,
த.பெ. சங்கரலிங்கம்,
க.எண். 27E, நடுத்தெரு, சீவலராயனேந்தல், களப்பாகுளம் கிராமம் சங்கரன்கோவில் வட்டம்.
மனுதார்,
1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,
2. சார் பதிவாளர், சங்கரன்கோவில்,
எதிர்மனுதாரர்,
**அறிவிப்பு**
எனது தாயார் புலியூராள், க.பெ. சங்கரலிங்கம் என்பவர் கடந்த 18.12.2004 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ச. சண்முகச்சாமி, சீவலராயனேந்தல்.

**மதுரை மாவட்டம்**
**பாலமேடு முதல்நிலை பேரூராட்சி**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
ந.க.எண்: 88/2025/அ1 நாள்: 14.05.2025
பாலமேடு பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில், வார்டு எண் 13, முருகையா நகர் குறுக்கு தெரு 6,7,8,9 மற்றும் வார்டு எண்.8 நாயுடு மெயின் தெரு ஆகிய தெருக்களில் தார்ச்சாலை புதுப்பித்தல் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் ஆன்லைன் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகின்றன.
1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து முழு விபரங்களுடன் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
அ) முன் கலந்தாய்வு கூட்டம் – 20.05.2025 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைனில் சமர்ப்பித்தல் – 28.05.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைன் திறத்தல் – 28.05.2025 மாலை 4.00 மணி
பா.சுமதி பாண்டியராஜன், தலைவர், பாலமேடு பேரூராட்சி, மதுரை மாவட்டம்
ந.சசிகலா, செயல் அலுவலர், பாலமேடு பேரூராட்சி, மதுரை மாவட்டம்
செ.ம.தொ.இ / 2347 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**தூத்துக்குடி மாவட்டம்**
**திருவைகுண்டம் தேர்வு நிலை பேரூராட்சி**
ந.க.எண்: 117/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 14.05.2025
தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி–2025–26 இன் கீழ், ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டில் திருவைகுண்டம் பேரூராட்சி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.
1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து முழு விபரங்களுடன் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
அ) முன் கலந்தாய்வு கூட்டம் – 20.05.2025 முற்பகல் 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 30.05.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 30.05.2025 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
4. நிர்வாக காரணங்களினால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டாலோ, காலநீட்டிப்பு செய்யப்பட்டாலோ அதன் விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in ல் அறிந்து கொள்ளலாம்.
திருமதி. பா.சினேகவள்ளி, தலைவர், திருவைகுண்டம் பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம்
திரு. கு.ராஜா, செயல் அலுவலர்(பொ), திருவைகுண்டம் பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம்
செ.ம.தொ.இ / 2349 / ஒப்பந்தப்புள்ளி / 2025

## சூப்பர் பெட் கிளாசிக் செஸ்:
# பட்டம் வென்றார் பிரக்ஞானந்தா




**புகரெஸ்ட், மே 18-**
கிராண்ட் செஸ் டூரின் ஒரு பகுதியான சூப்பர் பெட் கிளாசிக் செஸ் தொடரில் பட்டம் வென்றார் இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா. இது அவர் வென்றுள்ள முதல் கிராண்ட் செஸ் டூர் பட்டமாகும்.

**டை-பிரேக்கர்...**
ருமேனியாவில் உள்ள புகரெஸ்ட் நகரில் நடைபெற்ற இந்த தொடரில் 10 சுற்றுகள் நடந்து முடிந்த நிலையில் 5.5 புள்ளிகளுடன் ஆர்.பிரக்ஞானந்தா, பிரான்ஸ் நாட்டின் கிராண்ட் மாஸ்டர்களான பிரான்ஸின் வச்சியர்-லக்ரேவ், அலிரேசா பிரூஸ்ஜா ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார். இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க டை-பிரேக்கர் நடத்தப்பட்டது. முதல் டை-பிரேக்கரில் அலிரேசா ஃபிரூஸ்ஜா மற்றும் பிரக்ஞானந்தா விளையாடினர். ஆட்டம் டிரா ஆனதால் தலா 0.5 புள்ளிகள் வழங்கப்பட்டது.

**பிரக்ஞானந்தா சாம்பியன்...**
தொடர்ந்து நடைபெற்ற 2-வது டை-பிரேக்கரில் வச்சியர்-லக்ரேவ், அலிரேசா ஃபிரூஸ்ஜா இடையிலான ஆட்டம் டிரா ஆனது. 3-வது டை-பிரேக்கரில் பிரக்ஞானந்தா, வச்சியர்-லக்ரேவை வீழ்த்தி 1 புள்ளியை பெற்றதோடு சாம்பியன் பட்டத்தையும் வென்றார். இந்த வெற்றியின் மூலம் 77,667 டாலர்கள் அவருக்கு பரிசுத் தொகை கிடைத்துள்ளது. இந்திய ரூபாயில் இதன் மதிப்பு சுமார் 66.48 லட்சம் என தெரிகிறது.

**நம்பமுடியாத உணர்வு...**
"ருமேனியாவில் உள்ள புகரெஸ்ட் நகரில் நடைபெற்ற சூப்பர்பெட் கிளாசிக் செஸ் தொடரை வென்றுள்ளது. நம்பமுடியாத உணர்வை இது தருகிறது. எனக்கு தொடர்ந்து ஊக்கம் தரும் அணியினர் மற்றும் ஆதரவாளர்களுக்கு நன்றி!" என பிரக்ஞானந்தா கூறியுள்ளார். இந்த தொடரில் குகேஷ் 6-ம் இடம் பிடித்துள்ளார்.

### முதல்வர் ஸ்டாலின் பாராட்டு
**சா**ம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு தமிழக முதல்வர் முக ஸ்டாலின் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- ருமேனியா சூப்பர் பெட் செஸ் கிளாசிக் தொடரில் வெற்றி பெற்ற பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்துகள் கிளாசிக்கல் மற்றும் பிளிட்ஸ் சுற்றுகளில் அவரது அசாத்திய திறமை வெளிப்பட்டது. செஸ் போட்டிகளில் இந்த அற்புதமான தருணத்தை தமிழ்நாடு கொண்டாடுகிறது என தெரிவித்துள்ளார்.

## சாலைகள் அமைப்பதில் தரக்கட்டுப்பாடுகள்:
# அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு

**சென்னை, மே 18-**
சாலைகள் அமைப்பதில் தரக்கட்டுப்பாடுகள் தொடர்பாக கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது; நெடுஞ்சாலைத்துறையின் மூலம் தற்போது 74,021 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் மற்றும் உருவாக்கப்படும் அனைத்து சாலைகளில் மேற்கொள்ளப்படும் பணிகளின் தர உறுதி செய்வதற்கு தனியாக ஒரு தர நிர்ணய அமைப்பு தேவை என்ற கருத்தின் அடிப்படையில் தமிழக அரசால் ஒரு தர நிர்ணய மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டது. தர நிர்ணய மேலாண்மை அமைப்பின் மூலம் புதிய முறையில் மூன்று அடுக்கு தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் தர உறுதியினை செயல்படுத்த தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. .

எனவே தார்க் கலவை மற்றும் சிமெண்ட் கலவை உருவாக்குவதில் தரக்கட்டுப்பாடு பொறியாளர்களுக்கு தான் 100 சதவீதம் பங்கு உள்ளது. தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் மற்றும் தளப் பொறியாளர்கள் தாரின் படிநிலை தரத்தினை பரிசோதனை செய்ய வேண்டும். தார்க் கலவை உருவாக்கும் போது ஜல்லி, தார் மற்றும் இதர மூலப் பொருட்கள் சரியான அளவில் கலக்கப்படுகிறா? என்பதை தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் சாலை சேதமடையாமல் நிலைத்து இருக்கும்.

கான்கிரீட் கலவையில் சிமெண்ட் கல் மற்றும் தண்ணீர் சரியான அளவில் கலக்கப்படுகிறதா என்பதை பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் கான்கிரீட்க்கு ஏழு நாட்கள் மற்றும் 28 நாட்களுக்கு உறுதி சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். அதனை உரிய பதிவேட்டில் பதியப்பட்டு, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், ஆய்வுக்கு வரும்போது பொறியாளர்கள் பார்வைக்கு கொண்டு வரவேண்டும்.

பாலங்கள் மற்றும் தடுப்புச்சுவர்களில் பயன்படுத்தப்படும் கம்பிகளின் தரம் மற்றும் எடை உரிய முறையில் சோதனை செய்து பதிவேட்டில் பதியப்பட வேண்டும்." இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழ் பாடத்தில் 93 மதிப்பெண் எடுத்த
# பீகார் மாணவிக்கு தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் பாராட்டு



**சென்னை, மே 18-**
தமிழில் 93 மதிப்பெண் எடுத்த பீகார் மாணவிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சென்னை அடுத்த கவுல் பஜாரில் உள்ள அரசுப் பள்ளியில் பயின்ற பீகாரை சேர்ந்த ஜியா குமாரி, 10-ம் வகுப்பில் மொத்த மதிப்பெண் 467-ம், தமிழில் 93 மதிபெண் எடுத்து அசத்தி உள்ளார். இது தொடர்பாக மாணவி ஜியா குமாரி கூறுகையில், தமிழ் நாட்டின் கல்வி மற்றும் அரசின் திட்டங்கள் சிறப்பாக இருப்பதாக பாராட்டு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது: பள்ளியில் கோச்சிங் சிறப்பாக இருந்தது. தினமும் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கிறது. 'நான் முதல்வன் திட்டம்' என்னை மிகவும் கவர்ந்தது. சொந்த ஊர் பீகார். படிப்பிற்காக இங்கு வந்தோம். என்னுடைய ஆசிரியர்கள் தமிழில் நல்ல மதிப்பெண் எடுக்க உதவினார்கள். அதனால் தான் இவ்வளவு மதிப்பெண் எடுக்க முடிந்தது. வீட்டில் அனைவரும் இந்தி தான் பேசுவோம். அப்பாவிற்கு தமிழ் தெரியாது. அம்மாவிற்கு தமிழ் தெரியும்.

17 வருடத்திற்கு முன்பு தமிழ்நாட்டிற்கு வந்தோம். ஆரம்பத்தில் தமிழ் படிக்க கடினமாக இருந்தது. போக போக தமிழ் பழகி விட்டது. அதிக மார்க் எடுக்க ஆசிரியர்களும் உதவி செய்தார்கள். பள்ளியில் வழங்கிய புத்தகம், ஷூ, நான் முதல்வன் திட்டம், சிஜி வகுப்பு உதவியாக இருந்தது. 11-ம் வகுப்பில் பயோ மேக்ஸ் எடுத்துட்டு, நீட் தேர்வு எழுதி டாக்டர் ஆக வேண்டும். அப்பா வெல்டிங் வேலை செய்கிறார்கள். தமிழ்நாட்டில் இருந்துதான் நாம் ஏதாவது ஆக வேண்டும் என்றும், படிப்பை முடித்த பிறகே ஊருக்கு போக வேண்டும் என்று அப்பா சொல்லி இருக்கிறார்கள். அம்மா மெடிக்கல் கம்பெனியில் வேலை செய்கிறார்கள். பீகாரில் கல்விச்சூழல் குறைவாக இருந்ததால் இங்கே வந்து விட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஜியாகுமாரியின்வீடியோ வைரலாகிவரும் நிலையில், அவருக்கு பாராட்டு தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அவரது வீடியோவை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், "தமிழ்நாடு - எதிர்கால இந்தியாவின் நம்பிக்கை" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.பி.எல். பிளே ஆப் சுற்று: எந்த அணிக்கு வாய்ப்பு..?

**சென்னை, மே 18-**
மீண்டும் ஐ.பி.எல். தொடங்கியுள்ள நிலையில், பிளே ஆப் சுற்றில் விளையாடப்போகும் அணி எது என்பது குறித்த அலசல்கள் அதிகரித்துள்ளன.

**மீண்டும் ஐ.பி.எல்....**
ரசிகர்களை மகிழ்வித்து வந்த 10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி கடந்த மார்ச் 22-ந் தேதி தொடங்கி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வந்தது. விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இந்த தொடர் இந்தியா - பாகிஸ்தான் ஏற்பட்ட போர்ப்பதற்றம் காரணமாக ஒரு வார காலம் நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது இந்தியா- பாகிஸ்தான் மோதல் முடிவுக்கு வந்த நிலையில் பாதியில் நிறுத்தப்பட்ட 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நேற்று மீண்டும் தொடங்கியது.

**கடும் போட்டி...**
நடப்பு தொடரில் இதுவரை எந்த அணியும் அடுத்த சுற்றுக்கு (பிளே-ஆப்) தகுதி பெறவில்லை. சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து விட்டன. 4 பிளே-ஆப் இடங்களுக்கு 7 அணிகள் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதன்படி பிளே-ஆப் சுற்றை எட்டுவதற்கு வாய்ப்புள்ள அணிகள் எவை என்பதை பார்க்கலாம்.!

**1. குஜராத் டைட்டன்ஸ்:**
இதுவரை 11 போட்டிகளில் விளையாடி 16 புள்ளிகள் பெற்றுள்ள குஜராத் டைட்டன்ஸ் அணி புள்ளி பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. மீதமுள்ள 3 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றாலே குஜராத் எளிதாக பிளே ஆப் சுற்றை எட்டிவிடும். 3 போட்டிகளிலும் தோல்வியடைந்தால் கூட மற்ற அணிகளின் முடிவுகள் சாதகமாக அமைந்தால் அந்த அணிக்கு வாய்ப்பு உண்டு.

**2. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு:**
குஜராத் அணி போலவே 16 புள்ளிகள் பெற்றுள்ள பெங்களூரு அணி ரன் ரேட் அடிப்படையில் புள்ளி பட்டியலில் 2-வது இடத்தில் உள்ளது. மீதமுள்ள 3 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றாலே அந்த அணி பிளே ஆப் சுற்று வாய்ப்பை உறுதி செய்து விடும். 3 போட்டிகளிலும் தோல்வியடைந்தாலும் அந்த அணிக்கு வாய்ப்புள்ளது. அதற்கு மற்ற அணிகளின் முடிவு அதற்கு சாதகமாக அமைய வேண்டும்.

**3. பஞ்சாப் கிங்ஸ்:**
11 போட்டிகளில் விளையாடி 7 வெற்றி மற்றும் மழையால் ஒரு போட்டி ரத்தான நிலையில் 15 புள்ளிகள் பெற்றுள்ள பஞ்சாப் 3-வது இடத்தில் உள்ளது. மீதமுள்ள 3 போட்டிகளில் 2-ல் வெற்றி பெற்றால் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறி விடும். மாறாக ஒன்றில் வெற்றி பெற்றாலே அந்த அணி ஏறக்குறைய பிளே ஆப் சுற்று வாய்ப்பை எட்டி விட வாய்ப்புள்ளது. மாறாக 3 போட்டிகளிலும் தோல்வியடைந்தால் வெளியேற நேரிடும்.

**4. மும்பை இந்தியன்ஸ்:**
12 போட்டிகளில் விளையாடி 7 வெற்றி கண்டுள்ள மும்பை அணி 14 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில் 4-வது இடத்தில் உள்ளது. மீதமுள்ள 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றால் பிளே ஆப் சுற்றை உறுதி செய்து விடும். மாறாக ஒரு போட்டியில் மட்டும் வெற்றி பெற்றால் மற்ற அணிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படும். அந்த அணியின் ரன் ரேட் (+1.156) வலுவானதாக இருப்பது கூடுதல் அம்சமாகும். இருப்பினும் 2 போட்டிகளிலும் தோல்வியடைந்த அந்த அணி லீக் சுற்றோடு வெளியேற வேண்டியதுதான்.

5. டெல்லி கேப்பிடல்ஸ்:
11 போட்டிகளில் விளையாடியுள்ள டெல்லி கேப்பிடல்ஸ் 13 புள்ளிகளுடன் (ஒரு போட்டி மழையால் ரத்து) 5-வது இடத்தில் உள்ளது. எஞ்சிய 3 ஆட்டத்திலும் வெற்றி பெற்றால் எந்த வித சிக்கலுமின்றி பிளே-ஆப் சுற்றுக்கு முன்னேறும். மாறாக 2-ல் மட்டும் வெற்றி பெற்றால் மற்ற அணிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டி இருக்கும்.

**6. கொல்கத்தா நைட் ரைடர்ஸ்:**
நடப்பு சாம்பியனான கொல்கத்தா அணி 12 போட்டிகளில் விளையாடி 11 புள்ளிகள் மட்டுமே பெற்றுள்ளது. மீதமுள்ள 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றாலும் அந்த அணியால் 15 புள்ளிகள் மட்டுமே பெற முடியும். அப்போதும் மற்ற அணிகளின் முடிவுக்காக கொல்கத்தா காத்திருக்க வேண்டியிருக்கும். இதனால் கொல்கத்தா அணியின் பிளே-ஆப் வாய்ப்பு ஏறக்குறைய மங்கி விட்டது.

**7. லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்:-**
11 போட்டிகளில் விளையாடி 5 வெற்றி, 6 தோல்வி கண்டுள்ள லக்னோ அணி 10 புள்ளிகளுடன் 7-வது இடத்தில் உள்ளது. மீதமுள்ள 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றால் மட்டுமே பிளே ஆப் சுற்று வாய்ப்பை நினைத்து பார்க்க முடியும். அப்போதும் மற்ற அணிகளின் முடிவு லக்னோவுக்கு சாதகமாக அமைய வேண்டும். அத்துடன் ரன் ரேட்டையும் லக்னோ வலுப்படுத்த வேண்டும். இப்படி எல்லா சூழ்நிலைகளும் அந்த அணிக்கு சாதகமாக அமைந்தால் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறும். இல்லையெனில் வெளியேற வேண்டியதுதான். இதனால் எதிர்வரும் போட்டிகள் அனைத்தும் மிக முக்கியமான போட்டிகளாக கருதப்படுகிறது.

# மாணவர்களின் மொழித்திறன்களை மேம்படுத்த 'லெவல் அப்' திட்டம்
## பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு

**சென்னை, மே 18-**
மாணவர்களின் கணிதம், அறிவியல், ஆங்கிலம் ஆகியவற்றின் அடிப்படைத் திறன்களை மேம்படுத்த பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு மாணவர்களின் அடிப்படை திறன்களில் முன்னேற்றம் காணப்பட்டபோதிலும், தேசிய அளவில் நடைபெறும் என்.ஏ.எஸ்., ஏ.சி.ஈ.ஆர், போன்ற திறன் அளவீட்டு ஆய்வுகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் வகுப்புக்கேற்ற மொழித் திறன்கனை அடைவதில் குறைபாடு கொண்டிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

மாணவர்களின் மொழித் திறன்களை மேம்படுத்தும் ஒரு புதிய முன்னெடுப்பாக "லெவல் அப் " என்ற தன்னார்வ திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது, அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் அடிப்படைத் திறன்களை மாணவர்கள் எளிதாக கற்றுக் கொள்ளும் வனகயில் ஏற்கனவே ஆசிரியர்களால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற செயல்பாடுகளை கொண்ட "மொழி வள வங்கி" ஒன்றை உருவாக்குவதாகும்.

மாவட்டம் தோறும் (மாவட்டத்திற்கு நான்கு அல்லது ஐந்து ஆசிரியர்கள் வீதம்) தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் லெவல் அப் வாட்ஸ் அப் குழுவில் இனணக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் ஆங்கில அடிப்பனைத் திறன்கள் மேம்படுத்துவது குறித்தும், சிறப்பாக தங்களது திறன்வளர் நுட்பங்களை கையாளும் ஆசிரியர்களின் அனுபவங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், புலனக்குழுவில் ஆசிரியர்கள் தங்களது கற்பித்தல் வழிமுறைகள் தொடர்பான பதிவுகளை பகிரும் வகையில் அப்புலனாய்க்குழுவானது அமைக்கப்படும்.. ஒவ்வொரு மாதமும் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் நேரடி கண்காணிப்பில், பள்ளிகளில் லெவல் அப் என்ற தன்னார்வ திட்ட செயலாக்கத்தினால் மாணவர்கள் பெற்ற அடிப்படை ஆங்கில மொழித்திறன் அடைவு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாதி, மத வெறி குடிபெயர்ந்துள்ளது:
# நயினார் நாகேந்திரனுக்கு அமைச்சர் கண்டனம்

**சென்னை, மே 18-**
தேசப்பற்று இல்லாவிடில் பாகிஸ்தான் செல்லுங்கள் என்று பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதற்கு அமைச்சர் மனோ தங்கராஜ் விமர்சனம் செய்துள்ளார்.

இதுகுறித்து மனோ தங்கராஜ் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:-

நயினார் நாகேந்திரன் இப்படி பேசுவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பா.ஜ.க. தலைவர் ஆனதும் சாதி வெறியும், மத வெறியும் அவருள் குடிபெயர்ந்துள்ளது. இதனால் வெளிப்படையாகவே தொடர்ந்து வெறுப்பரசியல் பேசி வருகிறார். இதனால் அவருக்கான அடையாளத்தை நயினார் இழந்துவிட்டார்.

1500 ஆண்டுகள் இந்திய மண்ணை ஆக்கிரமித்திருந்த மனுஸ்மிருதியும், பா.ஜ.க.வின் மூதாதையர்களான இந்து மகாசபா, ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவெறி அமைப்புகளின் இந்து ராஷ்ட்ரா முழக்கமும் தான் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குக் காரணம்.

பிரிட்டிஷாரிடம் ஓய்வூதியம் வாங்கிக் கொண்டு தங்கள் வயிற்று பிழைப்பை ஆற்றியவர்களின் வாரிசுகள், நாட்டுப்பற்று குறித்து பேசுவது, "சாத்தான் வேதம் ஓதும்" கதை. தேசப்பிதாவை சுட்டுக்கொன்ற தீவிரவாதிகளின் வாரிசுகள் தேசப்பற்று குறித்து வாய் திறக்கலாமா?

பிரிட்டிஷாரின் கால்பாதம் தொட்டு தவழ்ந்து மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்து சிறையில் இருந்து வெளிவந்த தங்களின் கொள்கை மூதாதையர்கள் வழியில் வந்தவர்கள், இப்போது அமெரிக்க அதிபரின் அடிவருடிகளாக மாறி, நாட்டின் இறையாண்மையை கேலிக்கூத்தாக்கி உள்ளது, ஒட்டுமொத்த இந்தியர்களையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கரூர் அருகே பேருந்து-வேன் மோதிய விபத்தில் 4 பேர் பலி



**கரூர், மே 18-**
கரூர் அருகே ஆம்னி பேருந்தும் சுற்றுலா வேனும் மோதிக் கொண்ட விபத்தில் வேன் ஓட்டுநர், சிறுவன், சிறுமி உள்ளிட்ட 4 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 14 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

பெங்களூருவில் இருந்து நாகர்கோவிலுக்கு தனியார் ஆம்னி பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. நேற்று அதிகாலை கரூர் அருகேயுள்ள நாவல் நகர் பகுதியில் சென்றபோது சின்னவடுகபட்டியில் இருந்து உப்பிடமங்கலம் நோக்கி முன்னால் சென்று கொண்டிருந்த ட்ராக்டர் மீது ஆம்னி பேருந்து மோதியது. இதில் நிலைத்தடுமாறிய பேருந்து சாலை மையத்தடுப்பை தாண்டி கோவில்பட்டியில் இருந்து ஏற்காடுக்கு 32 பயணிகளுடன் சுற்றுலா சென்ற வேன் மீது மோதியது.

இதில் சுற்றுலா வேன் ஓட்டுநர் சசிகுமார் (52), வேனில் பயணம் செய்த சிறுமி தக்ஷிகா (8) உள்ளிட்ட 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். வேனில் பயணம் செய்த 12 பேர், ட்ராக்டர் ஓட்டுநர், ஆம்னி பேருந்து ஓட்டுநர் என 14 பேர் காயமடைந்தனர். வாங்கல் போலீஸார் மற்றும் கரூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வீரர்கள் உதவியுடன் விபத்தில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

இந்த விபத்தில் காயமடைந்த சரவணன் (47), சுகுணாதேவி (36), சபின் (25), அனு (20), ஆகாஷ் (23), தஷ்மிதா (6), கார்த்திக்ஜங்கரன் (8), தருண்விநாயக் (6), முருகன் (55), ரித்திகா (3), மீனா (51), அனில்பிரசாத் (30), தருணிகா (12), ஆர்த்தி (23) ஆகியோர் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து குறித்து வாங்கல் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மேலும், உயிரிழந்த 4 பேரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# இங்கிலாந்து டெஸ்ட் தொடர்: இந்திய அணி 19-ம் தேதி தேர்வு?

**புதுடெல்லி, மே 18-**
இந்திய கிரிக்கெட் அணி ஜூன் 20-ம் தேதி முதல் ஆகஸ்ட் 4-ம் தேதி வரை இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்டில் விளையாடுகிறது. ரோகித் சர்மா, விராட் கோலி, அஸ்வின் ஆகிய 3 சீனியர்கள் இல்லாமல் முதல் முறையாக இந்திய அணி இந்த தொடரில் விளையாடுகிறது. அஸ்வின் ஆஸ்திரேலியா பயணத்தில் பாதியில் ஓய்வு முடிவை அறிவித்தார். ஐ.பி.எல். போட்டி நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது ரோகித் சர்மாவும், விராட் கோலியும் சமீபத்தில் ஓய்வு முடிவை அறிவித்தனர்.

**19-ம் தேதி...**
இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி தேர்வு வருகிற 19-ம் தேதி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அஜித் அகர்கர் தலைமையிலான தேர்வு குழு கூடி இந்திய வீரர்களை அறிவிக்கப்படுகிறது. ரோகித் சர்மாவின் ஓய்வால் புதிய டெஸ்ட் கேப்டனாக யார் தேர்வு பெறுவார் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. கேப்டன் பதவிக்கான போட்டியில் வேகப்பந்து வீரர் பும்ரா, தொடக்க வீரர் சுப்மன்கில் ஆகியோர் இருக்கிறார்கள். இதில் சுப்மன்கில்லுக்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது.

**சுப்மன்கில்...**
பந்து வீச்சாளரான பும்ராவால் 5 டெஸ்டுக்கு கேப்டனாக பணியாற்றுவது கடினமானது. இதனால் கிரிக்கெட் வாரியத்தின் தேர்வு சுப்மன்கில்லாக இருக்கிறது. மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்பு சுப்மன் கில்லை பயிற்சியாளர் காம்பீர் சந்தித்து ஆலோசித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் சுப்மன்கில் கேப்டனாக தேர்வு செய்யப்படவே அதிகமான வாய்ப்பு இருக்கிறது.

**சாய் சுதர்சன்...**
தமிழக வீரர் சாய் சுதர்சனுக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்பு வழங்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. அவர் 3-வது வரிசையில் விளையாடலாம். சுப்மன்கில்லும், ஜெய்ஷ்வாலும் தொடக்க வீரர்களாக களம் இறங்குவார்கள். விராட் கோலியின் இடமான 4-வது வரிசையில் கே.எல். ராகுல் விளையாடுவார். நிதிஷ்குமார் ரெட்டி, ஈஸ்வரன், ஹர்சித் ராணா, பிரசித் கிருஷ்ணா ஆகியோரும் தேர்வுக்கான வாய்ப்பில் இருக்கிறார்கள். சுழற்பந்து வீரர்கள் ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ் தேர்வு பெறலாம்.

## ரோகித் சர்மா நெகிழ்ச்சி



**மு**ம்பை வான்கடே மைதானத்தில் மூன்று புதிய ஸ்டாண்டுகள் திறக்கப்படும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், சரத் பவார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அப்போது இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா பெயரில் ஸ்டாண்டு திறக்கப்பட்டது. அந்த ஸ்டாண்டை ரோகித் சர்மா அப்பா- அம்மா, மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் சேர்ந்து திறந்து வைத்தனர். மேலும் மும்பை வான்கடே மைதானத்தில் ரோகித் சர்மா, அஜித் வடேகர், சரத் பவார் பெயரில் 3 புதிய ஸ்டாண்டுகள் திறக்கப்பட்டது.

இந்நிலையில் வான்கடே மைதானம் குறித்த நினைவுகளை ரோகித் சர்மா பகிர்ந்துள்ளார். அதில் அவர் கூறியதாவது:- ரெயிலில் இவ்வழியாக செல்லும் போதெல்லாம் வான்கடே மைதானத்தை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என நினைத்துக் கொண்டே பயணித்த நாட்களை நினைவுகூர்கிறேன். இந்த ஸ்டான்ட் மிகவும் ஸ்பெஷல். நான் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இது எப்போதும் நிலைத்து நிற்கப்போகிறது. இவ்வாறு ரோகித் கூறினார்.

## நீரஜ் சோப்ரா புதிய சாதனை

**டை**யமண்ட் லீக் தொடரின் 16-வது சீசன் நடந்து வருகிறது. இதன் 3-வது சுற்று கத்தாரின் தோஹாவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா 90.23 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து புதிய சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் 90 மீட்டர் தூரம் எறிந்த 3-வது ஆசியவீரர் என்ற பெருமையை நீரஜ் சோப்ரா பெற்றார். இதற்கு முன்பு இந்த இலக்கை எட்டிய மற்ற இரண்டு ஆசிய வீரர்கள் ஒலிம்பிக் சாம்பியனான பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் (92.97 மீ) மற்றும் சீன தைபேயின் சாவோ-சுன் செங் (91.36 மீ) என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் முடிவில் நீரஜ் சோப்ரா 2-வது இடம் பிடித்தார். ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 91.06 மீட்டர் தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். கிரனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 85.64 மீட்டர் தூரம் எறிந்து 3-வது இடம் பிடித்தார். மற்றொரு இந்திய வீரர் ஜெனோ கிஷோர் 78.60 மீட்டர் தூரம் எறிந்து 8-வது இடம் பிடித்தார்.

## தமிழகத்தில் அரசுப்பள்ளிகளில்
# 1.8 லட்சத்தை தாண்டிய மாணவர் சேர்க்கை

**சென்னை, மே 18-**
அரசுப் பள்ளியில் மாணவர் சேர்க்கை 1.8 லட்சத்தை தாண்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித் துறையின்கீழ் 37,553 அரசுப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 52 லட்சம் மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். மாணவர்கள் நலனுக்காக கற்பித்தல், கற்றல் சார்ந்து எண்ணும்-எழுத்தும், காலை உணவு, ஸ்மார்ட் வகுப்பறைகள் உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனிடையே, அரசுப் பள்ளிகளில் 2025-26 கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை கடந்த மார்ச் 1-ம் தேதி தொடங்கி விறு விறுப்பாக நடைபெற்று வருகிறது. பெற்றோர்கள் பலர் ஆர்வமுடன் தங்கள் பிள்ளைகளை அரசு பள்ளியில் சேர்த்து வருகின்றனர்.

அந்தவகையில் தமிழக அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை இதுவரை 1.8 லட்சத்தை தாண்டியுள்ளது. நடப்பாண்டில் 3 லட்சம் மாணவர்களை சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்க இன்னும் 16 நாட்களே உள்ள நிலையில் சேர்க்கைப் பணிகளை தீவிரப்படுத்த தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அங்கன்வாடி மையங்களில் படித்து முடித்த 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

### ஒட்டன்சத்திரத்திரம்

# தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு



**ஒட்டன்சத்திரம்.மே 18-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒட்டன் சத்திரம் மேற்கு, வடக்கு, மத் திய,ஒன்றியங்கள், ஒட்டன் சத்திரம் நகரம் உள்ளிட்ட பகுதிகளுக்கான நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத் திற்கு உணவு மற்றும் உண வுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர. சக்கர பாணி தலைமை வகித்து பேசியதாவது.

கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் தினமும் பொதுமக்களிடம் சென்று தமிழ்நாடு அரசின் நான் காண்டு சாதனைகளை எடுத் துக் கூறி முதலமைச்சர் தலை மையிலான தமிழக அரசுக்கு என்றென்றும் உறுதுணை யாக இருக்க வலியுறுத்த வேண்டுமென பேசினார். மேலும் கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் மோகன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஐ. வாடிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன், நகரச் செய லாளர் வெள்ளைச்சாமி, ஒன் றிய செயலாளர்கள் தர்மரா ஜன், பாலு, முன்னாள் ஒன் றிய பெருந்தலைவர் அய்யம் மாள், பொதுக்குழு உறுப்பி னர் செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண் டனர்.

# இளையான்குடி கிழக்கு ஒன்றிய பூத் கமிட்டி நிர்வாகிகள் கூட்டம்



**இளையான்குடி, மே 18-**

இளையான்குடி அருகே உள்ள கோட்டையூரில் அதி முக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீஸ்வரன் தலைமை யில் நடைபெற்றது.கூட்டத் திற்கு சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக செயலாளர் செந்தில்நாதன், கழக அமைப் புச் செயலாளர் சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப் பினர் நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில இளைஞரணி செய லாளர் கருணாகரன், ஒன்றிய செயலாளர் கோபி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்டஅம்மா பேரவை துணைசெயலாளர் மலைச் சாமி மற்றும் மாவட்ட ஒன் றிய நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். முன்ன தாக கிழக்கு ஒன்றிய பகுதிக ளான கருஞ்சுத்தி, பரத்தவ யல், சாத்தனூர்,சாலைக் கிரா மம் ஆகிய இடங்களில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோ சனை கூட்டம் நடைபெற் றது.கோட்டையூரில் நடை பெற்ற பூத் கமிட்டி நிர்வாகி கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் மலைச் சாமி நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தார்.



**முதுகுளத்தூர் பஸ் நிலையத்தில் தி.மு.க. அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து மாவட்ட செயலாளர் முனியசாமி தலைமையில் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டது. மாநில எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் எம்.சுந்தரபாண்டியன் ஒன்றிய செயலாளர்கள் கே.கர்ணன் எஸ்.டி.செந்தில்குமார் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

# நத்தம் அருகே ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்த காளைகள்..!



**நத்தம், மே 18-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சொறிப்பா றைபட்டி- சங்கரன்பாறை யில் முத்துமாரியம்மன், பால முருகன் கோவில் திருவி ழாவை முன்னிட்டு நேற்று ஜல்லிக்கட்டு போட்டி நடந் தது. ஜல்லிக்கட்டு போட் டியை வருவாய் கோட்டாட் சியர் சக்திவேல்,தாசில்தார் ஆறுமுகம் ஆகியோர் கொடி யசைத்து தொடங்கி வைத்த னர்.இந்த ஜல்லிக்கட்டில் திண்டுக்கல்,திருச்சி, நத்தம், புதுக்கோட்டை, தேனி, மதுரை போன்ற மாவட்டங் களிலிருந்து 600 காளைக ளும், 300 மாடுபிடிவீரர்களும் கலந்து கொண்டனர்.முதலில் கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன.

இதை யாரும் பிடிக்க வில்லை. தொடர்ந்து வாடி வாசல் வழியாக சீறி பாய்ந்து வந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் திமிலை பிடித்து அடக்க முயன்ற போது மாடு பிடிவீரர்களுக்கு பிடியில் சிக் காமல் காளைகள் துள்ளி தாவி சென்றன. காளைகளை போட்டி போட்டு அடக்கிய மாடுபிடி வீரர்களுக்கு பரிசு கள் வழங்கபட்டது. அதே போல் பிடிபடாத காளைக ளுக்கும் பரிசுகள் வழங்கபட் டது.

கட் டில், சேர், அண் டா, டைனிங் டேபிள், பேன், வேஷ்டிகள் என பல பரிசு கள் வழங்கபட்டன.ஜல்லிக் கட்டு பாதுகாப்பிற்காக டி. எஸ்.பி சிபி சாய் சௌந்தர் யன் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் மற் றும் மருத்துவ குழுவினர் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதில் காளைகள் முட்டிய தில் தோட்டனூத்து முத்துஅ ழகன் (30) சின்னாளபட்டி தங்கம் (25) உள்ளிட்ட மாடு பிடி வீரர்கள் 16 பேர் உள்பட 35 பேர் காயமடைந்தனர். படுகாயமடைந்த 5 பேர் மேல் சிகிச்சைக்காக திண்டுக் கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

### கலெக்டர் தலைமையில்

# +2 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது



**விருதுநகர்.மே 18-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பன்னிரெண் டாம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி கல்வியில் சேர்ப்பது தொடர் பான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக் டர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு முயற்சியாக பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் கல்லூரியில் சேர இயாத மாணவர்கள் மற்றும் முந்தைய கல்வி ஆண்டுகளில் பயின்று கல்லூரியில் சேர இயலாத மாணவர்களுக்கு வழிக்காட்டும் விதமாக சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட் டத்தில், மாணவர்களிடமிருந்து, உயர்கல்வி பயில்வதற்கான சந்தேகங்கள் மற்றும் குறைகளையும் கேட்டறிந்து மாணவர் கள் உயர்கல்வி சேர்வதற்கான வழிமுறைகள் குறித்து எடுத் துக் கூறப்பட்டுள்ளது.

மேலும், நமது மாவட்டத்தில் விருதுநகர் கல்வி அறக்கட் டளை என்ற அறக்கட்டளையின் மூலம் எந்த உதவியும் கிடைக்க முடியாத வறுமை நிலையில் இருக்கக்கூடிய மாண வர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்கிறோம். இது போல நிறைய தன்னார்வ அமைப்புகள், நிறுவனங்கள், உதவி மையங்கள் மாணவர்களின் கல்விக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக இயங்குகின்றனர். மேலும், இக்கூட்டத்தில் குடும்ப சூழ்நிலை, பொருளாதாரம், சரியான வழிகாட்டுதலின்மை, பாடப்பிரிவு கிடைக்காத நிலை போன்ற காரணங்களால் உயர்கல்வி தொடரமுடியா மல் இருப்பதாக தெரிவித்த மாணவ, மாணவியர்களிடம் அர சின் மூலம் வழங்கப்படும் திட்டங்கள், சலுகைகள், ஊக்கத் தொகைகள், எதிர்கால வேலைவாய்ப்புகள், மதிப்பெண்க ளுக்கு ஏற்றவாறு பாடப்பிரிவு துறைகளை தேர்ந்தெடுப்பது உள்ளிட்டவை குறித்தும், தீர்வுகளை எடுத்துக்கூறியும், உயர் கல்வி தொடர்வதற்கான உரிய அறிவுரை மற்றும் ஆலோச னைகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிவகாசி சார் கலெக்டர் ப்ரியா ரவிச்சந் திரன் திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, உதவி இயக்குநர் அரவிந்த், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிர் தௌஸ் பாத்திமா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியா ளர் அமர்நாத், மாவட்டமுதன்மைகல்விஅலுவலர் மதன்கு மார், அரசுமற்றும் அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கும்பக்கரை அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிப்பு

**தேனி, மே 18-**

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கும்பக்கரை அருவி அமைந்துள்ளது. இந்த அருவிக்கு தேனி மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்த அருவிக்கு கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்து நீர்வரத்து இருக்கும்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக கும்பக்கரை அரு வியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அருவியின் பாதுகாப்பு கம்பிகள் சேதமடைந்துள் ளது. இந்த நிலையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதையடுத்து பாதுகாப்பு கருதி, நேற்று ஒரு நாள் மட்டும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க வனத் துறையினர் தடை விதித்துள்ளனர்.



**மதுரை புறநகர் மேற்கு மாவட்டம், கள்ளிக்குடி வடக்கு ஒன்றியத்தில் புதிய பூத் கிளை அமைப்பதற்கான அ.தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற எதிர்கட்சி துணைத்தலைவருமான ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.**



**அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரமான எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பழனி முருகன் கோவில் மலையில் தங்கத்தேர் இழுத்து வழிபாடு செய்ய கட்சியின் மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர்.சரவணன் வருகை புரிந்தார். அப்பொழுது மூதாட்டி ஒருவர் கீழே மயங்கி விழுந்ததையடுத்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார். இச்சம்பவத்தால் பக்தர்கள் மனம் மகிழ்ந்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி மற்றும் டாக்டர் சரவணன் ஆகியோரை மனமுருக வாழ்த்தினர்.**

### எடப்பாடியாரின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு, தகவல் தொழில்நுட்ப பிரிவு-அண்ணா தொழிற்சங்க பேரவை சார்பில்

# வி.வி.ஆர்.ராஜ்சத்யன், ஆர்.கமலக்கண்ணன் ஏற்பாட்டில் ரத்தத்தின் ரத்தமே என்ற மாபெரும் ரத்ததான முகாம்

### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ., வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்



**மதுரை, மே 18-**

எடப்பாடி பழனிசாமி யின் 71-வது,பிறந்த நாளை முன்னிட்டு,தகவல் தொழில் நுட்ப பிரிவு மற்றும் அண்ணா தொழிற்சங்க பேரவையின் சார்பில் வி.வி.ஆர். ராஜ்சத் யன்,ஆர்.கமலக்கண்ணன் ஏற் பாட்டில் ரத்தத்தின் ரத்தமே என்ற மாபெரும் ரத்ததான முகாமினை முன்னாள் அமைச்சர் சொல்லூர் கே. ராஜூ,வி.வி.ராஜன் செல் லப்பா எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்த முகாமில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் இளைஞர்கள் ஆர்வமுடன் ரத்த தானம் செய்தனர்.

அ.திமு.க. பொதுச் செய லாளர் எடப்பாடி பழனிசாமி யின் 71- வதுபிறந்தநாளை முன்னிட்டு,தமிழக முழுவ தும் அ.தி.மு.க.சார்பில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவி கள் அன்னதானங்கள் நடை பெற்று வருகிறது. இதனை தொடர்ந்து கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் கழக அண்ணா தொழிற்சங்க பேரவையின் சார்பில், கழக ரீதியில் உள்ள 82 மாவட்டங் களில் ரத்தத்தின் ரத்தமே என்ற தலைப்பில் மாபெரும் இரத்ததான முகாம் நடை பெற்று வருகிறது. இந்த முகாம் கடந்த 11ஆம் தேதி முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த முகாமினை கழகத் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் வி.வி.ஆர்.ராஜ்சத்யன், கழக அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் ஆர்.கம லக்கண்ணன் ஆகியோர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்து வருகிறார்கள்.இதனை தொடர்ந்து மதுரை மாநகர் மதுரை புறநகர் கிழக்கு ஆகிய மாவட்ட கழகத்தின் சார்பில், மதுரை தமிழ்நாடு ஹோட்டலில் மாபெரும் ரத் ததான முகாம் நடைபெற்றது. இந்த முகாமினை முன்னாள் அமைச்சரும், மதுரை மாநகர் மாவட்ட கழகச் செயலாளரு மான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ., கழக அமைப்புச் செயலாளரும், மதுரை புறந கர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமா வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ.ஆகி யோர் தலைமை தாங்கினார். மேலூர் சட்டமன்ற உறுப்பி னர் பெரிய புள்ளான் என்ற செல்வம் முன்னிலை வகித் தார்.

இந்த ரத்ததான முகாமில் மதுரை அரசு ராஜாஜி மருத்து வமனை சார்ந்த மருத்துவர்க ளும் , மருத்துவ உதவியாளர் களும் ரத்தம் கொடுக்கும் நபர்களை உரிய பரிசோ தனை செய்தனர்.ரத்தம் தானம் செய்த பின்பு அவர்க ளுக்கு வேண்டிய சான்றிதழ், மற்றும் எடப்பாடி பழனி சாமி உருவப்படம் குறித்த பதக்கம், அதனை தொடர்ந்து அவர்களுக்கு வேண்டிய பழங்கள்,ஜூஸ், உணவுகள் ஆகியவை வழங்கப்பட்டது. இந்த ரத்ததான முகாமில் மாற்றுத்திறனாளிகள், இளை ஞர்கள் ஆர்வமுடன் ரத்த தானம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் செல் லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவ து- அ.தி.மு.க.பொதுச் செய லாளர் எடப்பாடியாரின் பிறந்தநாள் விழாவை ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. கழ கத்தில் பல்வேறு அணிகள் இருந்தாலும் இன்றைக்கு கழ கப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் நேரடி பார் வைக்கு கழக தொழில்நுட்ப பிரிவு உள்ளது. இன்றைக்கு ஏழை,எளிய மக்கள் பயன் பெறுவகையில் உயிர்க்காக் கும் வகையில் ரத்ததான முகாம் நடைபெறுகிறது. இந்த ரத்ததான முகாமில் இளைஞர்கள் ஆர்வமுடன் ரத்ததானத்தை செய்து வருகி றார்கள்.இதை பார்த்து ஆளுங்கட்சியே மிரண்டு போய் உள்ளது அந்த அள வில் இரத்ததான முகாம் நடைபெற்று வருகிறது. இந்த ரத்த தானம் மூலம் பெறப்படும் ரத்தங்கள் தனி யார் மருத்துவமனைக்கு கிடையாது.அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறது அங்கு இதன் மூலம் ஏழை மக்கள் பயன் பெறுவார்கள். ஒரு யூனிட் ரத்தம் மூலம் நான்கு உயிர்கள் காப்பாற்றப்படும் என்று மருத்துவர்கள் கூறுகி றார்கள். திமுக கட்சி கூட்டத் தில் பீர் பாட்டில் வைத்து அழைப்பார்கள் ஆனால் நாங் கள் மக்கள் பயன்பெறும் வகையில் ரத்ததானம் என்று அழைக்கிறோம். இன்றைக்கு இளைஞர்கள் அதிகமாக வரு கிறார்கள். இன்றைக்கு எடப் பாடியாருக்கு மக்கள் ஆதரவு அளித்து வருகிறார்கள். 2026 ஆண்டில் அவர்தான் முதல மைச்சர், தற்போது 10 ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொது தேர்வு நடைபெற்று வருகிறது. இதில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு எனது மேற்கு தொகுதிகள் பரிசு தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் தகவல் தொழில் நுட்ப பிரிவு மாநில செயலா ளர் வி.வி.ஆர் ராஜ்சத்யன் கூறியதாவது-

இன்றைக்கு இளைஞர்க ளுக்கு பல்வேறு திட்டங் களை செய்து தந்தவர் எடப் பாடியார், 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் மூலம் இளை ஞர்களின் வழிகாட்டியாக எடப்பாடியார் உள்ளார். எடப்பாடியாரின் நேரடி வழி காட்டின்படி கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு செயல் பட்டு வருகிறது. இன்றைக்கு கழக தொழில்நுட்ப பிரிவு மற்றும் அண்ணா தொழிற் சங்க பேரரையின் சார்பில் கழக ரீதியில் உள்ள 82 மாவட்டங்களில் ரத்தத்தின் ரத்தமே என்ற தலைப்பில் மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது.கழக ரீதியில் உள்ள 82 மாவட்டத் தில் நடைபெற்ற இந்த ரத்த தான முகாமில் 40 ஆயிரம் பேர் ஆவலுடன் ரத்தம் கொடுக்க வந்தனர்.

இதில் பல்வேறு சோதனை செய்யப்பட்டது சிலருக்கு ஹீமோகுளோபின் உள்ளிட்ட குறைபாடு உள்ள வர்களை தவிர்த்து இதுவரை 20 ஆயிரம் பேர் ரத்தம் கொடுக்கப்பட்டனர். எம். ஜி.ஆர்., அம்மா ஆகியோர்க ளுக்கு தொண்டர்கள் ரத் தத்தை கொடுத்தனர் ,அதே போல் இன்றைக்கு இயக்கத் தின் மூன்றாவது அத்தியாய மான எடப்பாடியாருக்கு தொண்டர்கள்,இளைஞர்கள் ரத்தத்தை கொடுக்கிறார் கள்.அதேபோன்று இன் றைக்கு மாற்றுத்திறனாளிகள் ஆர்வத்துடன் ரத்ததானம் செய்துள்ளனர். குறிப்பாக இளைஞர்கள் எடப்பாடியார் தான் தங்களுக்கு பாதுகாப்பு, வேலையை அனைத்தும் வழங்கமுடியும் என்று உறுதி யாக இருக்கிறார்கள். எடப் பாடியாரின் பிறந்தநாள் விழா ரத்த தானம் என்று அறி வித்துடன் இளைஞர்கள் ஆர் வமுடன் கலந்து கொண்ட னர். இவ்வாறு அவர் கூறி னார்.

# திருமங்கலம் இலக்கிய பேரவை கூட்டம்

**திருமங்கலம், மே 18-**

மதுரை மாவட்டம், திருமங்கலம் இலக்கியப்பேரவை யின் 331-வது கூட்டம்ஜவஹர்நகரிலுள்ள லிங்காமெட்ரிகுலே சன் பள்ளி வளாகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு பேரவைத்தலைவர் பூலோக சுந்தரவிசயன் தலைமை வகித்தார். எழுத்தாளர் இரா.கமலம் ராமச்சந்திரன், திருமங்கலம் அன்னைவசந்தா டிரஸ்ட் தலைவர் அமுதவள்ளி பழனிமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இலக்கிய பேரவை செயலாளர் சு.சங்கரன் வரவேற்று பேசினார்.

குறளும் பொருளும் என்ற தலைப்பில் இலக்கிய பேரவை துணைச் செயலாளர் ஜெயபாலகிருஷ்ணன் உரையாற்றினார். அறிவோம்வரலாறு என்ற தலைப்பில்இலக்கியப் பேரவை யின் பொருளாளர் சமூக ஆர்வலர் தமிழ்ச்செல்வன் பேசினார்.

இலக்கியசிந்தனை என்ற தலைப்பில் புரவலர்.செயற்கு ழுஉறுப்பினர் இரா.பால்பாண்டியன் உரைநிகழ்த்தினார். ஏரா ளமான இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்ட இந்த கூட் டத்தில் கோவை பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிப்பேரவை உறுப்பினர் அதலையூர் சூரியகுமார் முதல்வருக்கெல்லாம் முதல்வர் ஓமந்தூரார் என்ற நூல் அறிமுகம் செய்து உரையாற் றினார்.

இதனை தொடர்ந்து இலக்கியச்சுடர் குரு.ஜெயச்சந்திரன் சிறப்பு விருந்தினர் குறித்து அறிமுக உரையாற்றினார். இதை யடுத்து கூட்டத்தின் சிறப்பு விருந்தினராக தமிழ்செம்மல் சங் கரலிங்கம் பங்கேற்று திரைப்படங்களில் நகைச்சுவை என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இவ்விழாவின் நிறைவில் செயற்குழு உறுப்பினர் பழனிராஜ் நன்றி கூறினார்.



சென்னையில் நேற்று 100-வது பிறந்தநாளை கொண்டாடிய தி.மு.க. மூத்த முன்னோடியும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சோ.மா.ராமச்சந்திரனின் இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். அருகில் சோ.மா.ராமச்சந்திரனின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## சென்னையில் இருந்து 843 பேர் ஹஜ் பயணம்:
# அமைச்சர் நாசர் வழியனுப்பி வைத்தார்

சென்னை, மே 18-
சென்னையில் இருந்து நேற்று முன்தினம் ஒரே நாளில் 843 பயணிகளுடன் 2 ஹஜ் விமானம் சவுதி அரேபியாவுக்கு புறப்பட்டு சென்றது.

இஸ்லாமியர்களின் 5 கடமைகளில் ஒன்று புனித ஹஜ் பயணம் ஆகும். துல் ஹஜ் மாதத்தில் இந்த கடமையை நிறைவேற்ற இஸ்லாமியர்கள் சவுதி அரேபியாவில் உள்ள புனித மெக்கா நகருக்கு செல்வார்கள். நேற்று முன்தினம் புனித ஹஜ் பயணத்திற்காக, முதல் ஹஜ் விமானம் சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து சவுதி அரேபியா ஜித்தா நகருக்கு 200 பெண்கள் உள்பட 402 பேருடன் புறப்பட்டு சென்றது. ஒரே நாளில் 2-வது விமானம் 441 பேருடன் சென்றது.

புனித பயணம் செல்பவர்களை அமைச்சர் நாசர், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் நவாஸ்கனி எம்.பி., தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவர் அப்துல் சமது எம்.எல்.ஏ., தென் மண்டல ஹஜ் கமிட்டி உறுப்பினர் ஹசன் மவுலானா எம்.எல்.ஏ., ஹஜ் கமிட்டி செயலாளர் எம்.ஏ.சித்திக், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் விஜயராஜ் குமார், சிறுபான்மை நலவாரிய துணை தலைவர் இறையன்பன் குத்துஸ், அகமது அலி உள்பட ஹஜ் கமிட்டி உறுப்பினர்கள் வழியனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து அமைச்சர் நாசர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'முதல் நாளாக 2 விமானங்களில் 843 பேர் ஹஜ் பயணத்தை மேற்கொண்டு உள்ளனர்.

சென்னையில் இருந்து தமிழகத்தை சேர்ந்த 5,730 பேர் வருகிற 30-ந்தேதி வரை 14 விமானங்களில் புனித பயணம் செல்கின்றனர். மேலும் தமிழ்நாட்டை சேர்ந்த 323 பேர் பெங்களூரு, மும்பை, ஐதராபாத், கொச்சி, கோழிக்கோடு விமான நிலையங்களில் இருந்து புறப்பட்டு செல்கின்றனர்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு சிறுபான்மை மக்கள் மீது உள்ள அக்கறையின் காரணமாக ஒவ்வொருக்கும் ரூ.25 ஆயிரம் மானியமாக கொடுத்து வருகிறோம். இந்த ஆண்டு மட்டும் ரூ.14 கோடியே 21 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஹஜ் பயணத்திற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் மானியம் கொடுக்கப்பட்டு உள்ளது' என கூறினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில தகவல் தொழில்நுட்பபிரிவு, அண்ணா தொழிற்சங்க பேரவை சார்பில் மதுரையில் மாநில செயலாளர்கள் வி.வி.ஆர்.ராஜ்சத்யன், ஆர்.கமலக்கண்ணன் ஆகியோர் ஏற்பாட்டில் 'ரத்தத்தின் ரத்தமே' என்ற ரத்ததான முகாமினை நேற்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ., வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

## 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில்
# கோபி ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சாதனை

ஈரோடு, மே 18-
கோபி ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை படைத்துள்ளனர்.

10 மற்றும் 11ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியானது. இதில், கோபி அருகே தாசம் பாளையத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ வெங்கடேஷ்வரா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியானது 21 ஆண்டுகளாக தொடர்ந்து 100 சதவீதம் தேர்ச்சி பெற்று வருகிறது. இந்தாண்டு மாணவி ரிதன்யா 500க்கு 496 மதிப்பெண்களுடன் முத லிடமும், மாணவி பரணி தர்ஷினி 494 மதிப்பெண் களுடன் இரண்டாமிடமும், மாணவர் ஸ்ரீஹரன் 493 மதிப்பெண்களுடன் மூன்றாமிடமும் பெற்று உள்ளார். அதே போன்று ஆங்கிலத்தில் 6 பேரும், கணிதத்தில் 5 பேரும், அறிவியல்மற்றும் சமூக அறிவியலில் தலா 14 மாணவர்களும் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்று உள்ளனர். 3 பாடங்க ளில் 3 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்களும், 6 மாணவர்கள் 2 பாடங்களில் 100க்கு 100 மதிப்பெண்களும் பெற்று உள்ளனர்.

491 முதல் 495 மதிப்பெண்களுக்கு மேல் 10 பேரும், 486 முதல் 490 மதிப்பெண்கள் வரை 12 பேரும், 485 மதிப்பெண்கள் வரை 15 பேரும், 480 வரை 16 பேரும், 475 வரை 24 பேரும் மதிப்பெண்கள் பெற்று உள்ளனர். 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் சாதனை படைத்த மாணவ, மாணவியரை முன்னாள் அமைச்சர் கே.சி. கருப்பணன், கல்வி நிறுவ னங்களின் செயலாளர் ஜி.பி. கெட்டிமுத்து, இயக்குநர்கள் முருகுசாமி, செங்கோட்டை யன், ஜோதி லிங்கம், ராசு என்கிற மோகனசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி பரிசு வழங்கினர்.





சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் சனிக்கிழமை நாட்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழு தலைவர் எஸ்.மதன்மோகன், கூடுதல் தலைமைச்செயலாளர் க.மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் சி.பழனி உள்ளனர்.

# இந்த ஆண்டு கோடைக்கால மின் தேவை குறைவு: அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, மே 18-
"கோடைக்கால மின் தேவை, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக உள்ளதாக தமிழக மின்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

சென்னை, அண்ணாசாலையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்தில் இயங்கி வரும் மின்நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை, மின்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் நேற்று ஆய்வு செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் சிவசங்கர் கூறியது, "மின்னகத்தில், பொது மக்களிடமிருந்து புகார்களை பெறுவதற்காக, 3 ஷிப்டுகளில், ஒவ்வொரு ஷிப்ட்டுக்கும் 3 மேற்பார்வையாளர்கள் உட்பட 94 பணியாளர்களைக் கொண்டும், 45 மின்பகிர்மான வட்டங்களிலும் நாள் ஒன்றுக்கு 4 பேர் வீதம் 176 நபர்களைக் கொண்டும் 24x7 மணி நேரமும் இயங்கி வருகிறது.

மேலும், 9498794987 எண்ணுக்கு வரும் புகார்களை பெறுவதற்கு வசதியாக மின்னகத்தில் பணியாளர்கள் எண்ணிக்கை 65-ல் இருந்து 94 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொதுமக்களிட மிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


கோடைக்கால மின் தேவை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக உள்ளது. கோடை மழை பெய்து வருவது, காற்றாலை சீசன் தொடங்கி இருப்பது ஆகியவற்றால் இந்த ஆண்டு கோடை மின் தேவையை எளிதாக பூர்த்தி செய்ய முடியும். காற்றாலை மின்சாரம் கொள்முதல் செய்யப்படும் விஷயத்தில், மின்வாரியத்துக்கு எவ்வளவு தேவை உள்ளதோ அதைப் பெற்று பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது" என்று அமைச்சர் கூறினார்.

இந்த ஆய்வின் போது, மின்வாரிய தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின்னுற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.



சென்னை தங்கசாலை தெருவில் நேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு வீதி, வீதியாக சென்று நடைபயணம் மேற்கொண்டு பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், நிர்வாகிகளுடன் பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் தேவை கண்டறிந்து குறைகளை தீர்க்கும் விதமாக பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் மூடியினை சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

# காஞ்சி வரதராஜ பெருமாள் கோவில் தேரோட்டம்: திரளான பக்தர்கள் பங்கேற்பு



காஞ்சிபுரம், மே 18-
காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில் வைகாசி பிரம்மோற்சவத்தில் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நேற்று (மே 17) நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாலைகளில் திரண்டு பெருமாளை வழிபட்டனர்.

காஞ்சிபுரத்தில் அத்திவரதர் வைபவம் மூலம் உலகப் புகழ் பெற்றது வரதராஜ பெருமாள் கோவில். இந்தக் கோவில் 108 வைணவ திவ்யா தேசங்களில் ஒன்று. இந்தக் கோயிலின் வைகாசி பிரம்மோற்சவம் கடந்த 12-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த பிரம்மோற்சவத்தையொட்டி காலை, மாலை இரு வேளையும் பெருமாள் வீதியுலா வரும் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த பிரம்மோற்சவத்தில் புகழ்பெற்ற உற்சவங்கள் கருட சேவை உற்சவம் மற்றும் தேரோட்டம் ஆகும். இந்த உற்சவங்களைக் காண காஞ்சிபுரம் மாவட்டம் மட்டுமின்றி, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் காஞ்சிபுரத்துக்கு வருகை தருவர். கருட சேவை கடந்த 14-ம் தேதி நடைபெற்று முடிந்த நிலையில் நேற்று (மே 17) தேரோட்டம் நடைபெற்றது.

இந்த தேரோட்டத்தையொட்டி அதிகாலையில் சாமி புறப்பட்டு தேரடியில் உள்ள தேருக்கு வந்தது. காலை 6 மணிக்கு மேல் திருத்தேர் புறப்பட்டது. அங்கிருந்து ராஜ வீதிகள் வழியாக வந்த தேர் மீண்டும் நிலையை வந்தடைந்தது. சுமார் 2 லட்சம் பேர் இந்த தேரோட்டத்தை கண்டு வழிபட்டனர்.

இந்தத் தேரோட்டம் காரணமாக காஞ்சிபுரம் நகரின் முக்கிய வீதிகளில் மக்கள் திரண்டதால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரத்தில் ஆங்காங்கே 5 தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் இறக்கிவிடப்பட்டனர். தற்காலிக கடைகள் பலவும் இந்த விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்தன.



சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் சாலைகள் அமைப்பதில் தரக்கட்டுப்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு செயலாளர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மு.சரவணன், முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, சிறப்பு அலுவலர் இரா.சந்திரசேகர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.